# பற்றிய அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கை

நிதி, நிதி சார் மற்றும் பொருளாதார ஊகங்கள் மதிப்பீடு


பிரிவு I : அறிக்கைக்கான அறிமுகம்

1.1 பின்னணி

1.2 தடைகள் மற்றும் தகுதிகள்

1.3 கண்ணோட்டம்

பிரிவு II : வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டுப் பகுப்பாய்வு-2019

1. தவறவிடப்பட்ட மதிப்பீடுகள்

1.1 வெளிப்படுத்தப்படாத அல்லது தெளிவற்ற பின்விளைவுகளுடனான நிதி நடவடிக்கைகள்

1.1.1 வெளிப்படுத்தப்படாத விளைவுகள் : சுட்டிக்காட்டும் உதாரணங்கள்

1.1.2 நிகழ்நிலைக் கற்கை : பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வை

1.2 தவறவிடப்பட்ட தகவல்களுடனான எதிர்மறை நிதி நடவடிக்கைகள்

1.2.1 வருமானக் குறைப்பு முன்மொழிவுகள்

1.2.2 செலவீன முன்மொழிவுகள்

1.3 தவறவிடப்பட்ட தகவல்களுடனான நேர்மறை நிதி நடவடிக்கைகள்

1.3.1 வருவாய் உருவாக்கும் திட்டங்கள்

2. மதிப்பீடு பொருந்தாமை

2.1 உழைப்புக்கேற்ப செலுத்தும் (PAYE) வரி

2.2 பெறுமதி சேர் வரி (VAT)

2.3 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT)

2.4 இறக்குமதித் தீர்வைகள்

2.5 நிறுவன வரி

பிரிவு III : தகவல்  தராதரங்கள் மற்றும் ஏது நிலை சிரத்தை

1. வகைப்படுத்தல்கள் மற்றும் வடிவங்களில் இணக்கத்தைத்தர முடியாத வித்தியாசங்கள்

1.1 வகைப்படுத்தல்களில் வித்தியாசங்கள்

1.2 வித்தியாசங்களை இணைக்கப்படுத்தப் போதாமலுள்ள தகவல்கள்

2.பாரிய பொருளாதார எதிர்வுகூறல்களில் வித்தியாசங்கள்

பின்னிணைப்புக்கள்

பின்னிணைப்பு 1 : நிதியமைச்சினால் COPF க்கு வழங்கப்பட்ட ஆவணங்கள்

பின்னிணைப்பு 2 :  நிதியமைச்சினால் COPF க்கு வழங்கப்பட்டஇற்றைப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகள்

பின்னிணைப்பு 3 : நிதியமைச்சினால் COPF க்கு வழங்கப்பட்ட வருவாய் முன்மொழிவுகள்

பின்னிணைப்பு 4 :பிரசவகால விடுமுறை நன்மைகளின் கணக்கீடு

பின்னிணைப்பு 5 : நிதியமைச்சினால் COPF க்கு வழங்கப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட பந்தயம் மற்றும் சூதாட்ட வரி(2019)க்கான அடிக்கோடிடப்பட்ட அடிப்படைகள்

## 2019ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிய அரசாங்க நிதி பற்றிய குழுவின் அறிக்கை

நிதி, நிதி சார் மற்றும் பொருளாதார ஊகங்கள் மதிப்பீடு

குழு அங்கத்தவர்கள் : கௌரவ எம்.ஏ. சுமந்திரன் (தவிசாளர்) கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த, கௌரவ பந்துல குணவர்தன, கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,கௌரவ சுசந்த புஞ்சிநிலமே கௌரவ பிமல் ரத்நாயக்க ,கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன, கௌரவ எம்.ஏ. சுமந்திரன் ,கௌரவ மயில்வாகனம் திலகராஜா ,கௌரவ மயந்த திசாநாயக்க,கௌரவ முஜிபுர் ரஹுமான் ,கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி ,கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க ,கௌரவ (பேராசிரியர்) எஸ்.எம் முஹமட் இஸ்மாயில்

குழுவின் செயலாளர்: தம்மிக்க தஸநாயக்க

### பிரிவு I : அறிக்கைக்கான அறிமுகம்

### 1.1 பின்னணி

அரசாங்க நிதி பற்றிய குழு (COPF) ஆனது வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடுகளில் நிதி, நிதி சார் மற்றும் பொருளாதார ஊகங்கள் பற்றிய மதிப்பீட்டு ஆய்வை வழங்கும் பொறுப்பினை சுமந்துள்ளது. இந்த அறிக்கையானது, 2019 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் 2019 மார்ச் 5 அன்று சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அந்தப் பொறுப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ளது.கடந்த காலத்தைப் போலவே, குழுவானது நிதியமைச்சிடம் இருந்து தேவையான தகவல்களைப் பெறுவதில் சில தாமதங்களை எதிர்கொண்டது, இது இந்த அறிக்கையை சமர்ப்பிக்கும் கால எல்லையில் மிக்கது தாக்கமிக்க பாதிப்புகளை ஏற்படுத்தியது.

இந்த மதிப்பீடுகளானது மூன்று மூலாதாரங்களி அடிப்படையாகக் கொண்டது : (1) மார்ச் 5 2019 அன்று நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்ட பெறுமானங்கள்; (2) நாடாளுமன்றத்தில் மார்ச் 5 2019 அன்று வழங்கப்பட்ட 2019க்கான வரவு செலவுத்திட்ட முன் வரைபுகள் : (3) நிதியமைச்சினால் COPF க்கு வழங்கப்பட்ட திருத்தப்பட்ட மதிப்பீடுகள்(கணக்கீட்டு வடிவத்தில்),இன்னமும் வெளியிடப்படாதவை மற்றும் இதர ஆவணங்கள். (பின்னிணைப்பு 1 மற்றும் பின்னிணைப்பு 2)

இந்தக் குழுவானது, பாரிய பொருளாதார கட்டமைப்பில் (கடன் முகாமைத்துவம், பண வீக்கம், வட்டி வீதங்கள், நிதிப் பற்றாக்குறைகள் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி தொடர்பாக) மற்றும் அரசாங்கத்தின் பொருளாதார அனுமானங்கள், அனுமானங்கள் குறிப்பிடப்பட்ட வேளைகளில், செயற்படுகிறது.மதிப்பீட்டிலுள்ள அனைத்துப் பெறுமானங்களும் நடப்புப் பெறுமதி முறைகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

குழுவின் பணியானது இலங்கை மதியுரை குழாமான Verité Research உள்ளடங்கிய வெளிவாரி ஆலோசகர்களால் உதவப்பெற்றது. அவர்களது பெறுமதியான உள்ளீடுகளுக்கும் உதவிகளுக்கும் குழுவின் நன்றிகள்.

1.2 கட்டுப்பாடுகள் மற்றும் தகுதிகள்

ஆரம்பத்தில், குழுவானது இந்த மதிப்பீட்டுக்கு மிகப்பொருத்தமான சில தடைகளையும் தகுதிகளையும் குறித்துக்கொண்டது. இவை கடந்த வருடமும் இடர்ப்பாடாகவிருந்தன.

குழுவின் பணியை இலகுவாக்குவதற்காக, அவசியமான தகவல்களை அணுகுதல் மிகப் பளுமிக்க பொறுப்பாக இருந்ததனால்,COPF நிதியமைச்சுக்கு (MOF) பெப்ரவரி 12, 2019இல், பின்வருவனவற்றை வலியுறுத்தி கடிதமனுப்பியது :

> "2019க்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை முறைப்படுத்தும் அடிப்படையிலான அனுமானங்கள்,தகவல்கள் மற்றும் பகுப்பாய்வுகளில், MOF இந்த உள்ளீடுகளை எழுத்துமூலம் பெற்றுக்கொள்வதற்காக நாம் இதனை எழுதுகிறோம். பகுப்பாய்வுகளுக்கும் கணிப்புக்களுக்கும் அவசியமான அனைத்து தகவல்களும் ஆவணங்களும் COPFக்கு வழங்கப்படவேண்டும் என்பதையும் அவ்வாறு தரப்படாதவை இல்லாதவை என்றே கருதப்படுவதோடு, அவற்றுக்கான ஒதுக்கீடுகள் தன்னிச்சையாகவும் அதே போலவும் கருதப்படுவதோடு, COPFஅவ்வாறான குறைபாடுகளை அறிக்கைகளில் சுட்டிக்காட்டிடவும் தள்ளப்படும் என்பதையும் தயவு செய்து கவனத்தில் கொள்க"

இவ்வறிக்கையின் பின்னிணைப்பு 1 ஆனது MOF இனால் COPFக்கு வழங்கப்பட்ட தகவல்களின் முழுமையான பட்டியலை வழங்குகிறது. வழங்கப்பட்ட தகவல்கள் துண்டு துண்டாகவும், போதாக்குறையாகவும் இருந்ததோடு,முற்கூறப்பட்ட தகவல்களை மீண்டும் மீண்டும் அறியவேண்டியதாகவும் இருந்தது. இந்த அறிக்கையுடனான மேலதிக இணைப்புக்கள், இந்தப் பகுப்பாய்வுக்குத் தேவையாக, MOF இனால் வழங்கப்பட்ட தகவல்கள் மட்டுப்படுத்தப்பட்டனவாக அமைந்திருந்தன.

உயிர்ப்பான தொடர்பாடல்கள் இருந்தும் கூட, முன்னைய வருடங்களை போலவே, குழுவானது அவசியமான தகவல்களை பெற்றுக்கொள்வதில் கணிசமான சவால்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

COPF இந்த அறிக்கையை வழங்கும்போது, சவாலான ஒரு காலக்கெடுவின் மத்தியில் செயற்பட்டதுடன்,இந்தக் கணிப்பீடுகளை கணிசமான மாறுபாடுகளைக் கொண்ட, அவ்வப்போது, பல்வேறு வித்தியாசமான வடிவங்களிலும் பல்வேறு மூலங்களின் மூலமாகவும் தரப்பட்ட தரவுகளைக் கொண்டே நடத்த முடிந்தது. எனவே, குழுவானது இந்த அறிக்கையில் ஏதாவது தவறுகள் அவதானிக்கப்பட்டால் அதை வரவேற்று திருத்திக்கொள்ளக் காத்திருக்கிறது. இந்த அறிக்கையானது பிரதானமாக நாடாளுமன்றத்துக்கு அறியத்தரவும். குறிப்பிட்ட தகவல்களை அணுகுதலை

இலகுபடுத்தவும்,வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை மேம்படுத்தவும், வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை உருவாக்குவதிலும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுவதிலும் வழங்கும் முறைகளை மேம்படுத்தவுமே பயன்படுத்தப்படவேண்டும்.

1.3. கண்ணோட்டம்

வருடாந்த வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதமும் ஏற்றுக்கொள்ளலும் நாடாளுமன்ற வருடாந்த நிகழ்ச்சி நிரலில் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியாகும். அரசாங்கத்துக்கு தங்களுடைய புதிய கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை அறிவித்து, அதன் மூலம் நாட்டின் அபிவிருத்தியை வேகப்படுத்தும் திட்டங்கள் இருப்பதாகவும் வெளிப்படுத்தும் மிக முக்கியமான நிகழ்வாக அமைகிறது. எவ்வாறாயினும் அவ்வாறான ஒவ்வொரு திட்டமும் அரசாங்க நிதியில் ஒரு விளைவை ஏற்படுத்தும். அரசியல்அமைப்பின் 148வது உறுப்புரையானது நாடாளுமன்றத்துக்கு அரசாங்க நிதி கட்டுப்பாடு பற்றிய இறுதியான அதிகாரத்தையும் பொறுப்பையும் நிலை நிறுத்தியுள்ளது. இதனால் வரவு செலவுத்திட்டமானது இறுதியாக ஏற்றுக்கொள்ளப்படும்போது நாட்டுக்கு மிக அதிகமான முக்கியத்துவம் பெறுவதோடு, நாடாளுமன்றத்தின் மிக முக்கியமான தொழிற்பாடாகவும் அமைகிறது.

இதனால் வரவு செலவுத்திட்டத்தின் வேலைத்திட்டத்தைப் புரிந்து கொள்ளல், செம்மைப்படுத்தல் மற்றும் அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதன் மூலநெறித்துவமானது நாடாளுமன்றத்துக்கு வழங்கப்படும் தகவல்களின் தரத்திலேயே தங்கியுள்ளது என்பதை, மீள வலியுறுத்தவேண்டியது அவசியமில்லை. இந்த அறிக்கையுடன், அரசாங்க நிதி பற்றிய குழுவானது 2019ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீட்டின் நிதி, நிதி சார் மற்றும் பொருளாதார அனுமானங்கள் மற்றும் வருவாய், செலவீனங்கள் பற்றிக் கிடைத்த தகவல்களின் நிறைவுத்தன்மை, உண்மைத்தன்மை மற்றும் துல்லியத்தன்மை ஆகியவற்றை மேம்படுத்த நாடாளுமன்றத்துக்கு உதவுகிறது.

தற்போதைய அறிக்கையானது முன்னைய வருடங்களில் COPFஇனால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் வளர்ச்சியின் தொடர்ச்சியாக அமைகிறது. வரவு செலவுத்திட்டத்தின் ஒவ்வொரு வருவாய் மற்றும் செலவுகள் வகைகளின் பகுப்பாய்வாக இருக்கும் கட்டமைப்பாக மட்டுப்படுத்துவதோடு நின்றுவிடாமல், இந்த அறிக்கையானது தரப்பட்டுள்ள வரவு செலவுத்திட்ட அனுமானங்கள் மற்றும் கணிப்பீடுகளின் சில முக்கியமான தகவல் விபரங்களை ஆராய்கிறது.

கடந்த வருடங்களில் பல அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள், அந்த முன்மொழிவுகள் கட்டமைக்கப்பட்ட கணிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் பின்னர் குறைபாடுள்ளவையாகக் கண்டறியப்பட்டபின்னர், கிடப்பில் போடப்பட்டன அல்லது கணிசமானளவு மாற்றங்களுக்குள்ளாகின.அவ்வாறான திருத்தங்கள் மிக செலவு கூடியனவாகும்,அரசாங்க நிதி முகாமைத்துவத்தின் தோல்விகளின் சாரமாகவும் அமைந்தன.

அவ்வாறான தோல்விகள் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத்திட்ட நிகழ்முறைகளின் போது,கடுமையானதும் உறுதியானதுமான விவாதங்கள் மூலம் குறைக்கப்படலாம். எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தில் அதிகளவான தர்க்கரீதியானதும் கடுமையானதுமான விவாதங்கள் இடம்பெறுவதற்கான மிகப்பெரிய தடையாகவிருப்பது, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு குறித்த தகவல்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் பற்றாக்குறை ஆகும்.

நீண்டகால அடிப்படையில் நாடாளுமன்றத்தினால் முகம் கொடுக்கப்படும் இந்தத் தகவல் சிக்கலானது நாடாளுமன்றத்துக்காக சேவையாற்றக்கூடிய முழுமையான சுயாதீனமான வரவுசெலவுத் திட்ட அலுவலகம் மூலமாகத் தீர்க்கப்படவேண்டும். இந்த இடைக்காலத்தில் COPF தனது அறிக்கைகள் மூலமாக நாடாளுமன்றத்துக்கு உதவ விளைகிறது.

COPF இன், 2019 வரவு செலவுத்திட்டத்தின் இந்த முதலாவது அறிக்கையானது வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள், அடிப்படையான அனுமானங்கள் மற்றும் பகுப்பாய்வுகளுக்கான அத்தியாவசிய தகவல்கள் ஆகியவற்றின் தரங்களை மேம்படுத்துவதற்கு உடனடியாக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றிய அவதானிப்புகளை நாடாளுமன்றத்துக்கு வழங்குகிறது.

இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி, நிதிசார் மற்றும் வரவு செலவுத்திட்ட கணிப்பீடுகள்,நிதி, நிதி சார் மற்றும் பொருளாதார அனுமானங்கள் குறித்த, பிரதானமான தகவல் விடயங்கள்,மூன்று பகுதிகளாக வழங்கப்பட்டுள்ளன.

1. தவறவிடப்பட்ட கணிப்பீடுகள் : அதாவது 2019 வரவு செலவுத்தித்திட்டத்தில் மற்றும்/அல்லது அதன் துணை ஆவணங்களில் வரவு செலவுத்தித்திட்ட முன்மொழிவுகளில் இல்லாத அல்லது தெளிவற்றதான நிதி விளைவுகள் குறித்த மதிப்பீடுகள்

2.கணிப்பீடுகள் பொருந்தாமை : வரவு செலவுத்தித்திட்ட மதிப்பீடுகள் முன்னைய தரவுகள் அல்லது தரப்பட்டுள்ள நிதி, நிதி சார் மற்றும் பொருளாதார அனுமானங்களுடன் பொருந்தாமை

3. தகவல் தராதரங்கள் மற்றும் ஏது நிலை சிரத்தை : வழங்கப்பட்ட தகவல்கள் பற்றிய உள்ளக தொடர்ச்சியான நடத்தை பற்றிய தீவிர அக்கறை மற்றும்/அல்லது கணிப்பீடுகளை உருவாக்குவது குறித்த துல்லியத்தன்மை மற்றும் தொழில்சார் இயலுமை பற்றியது

இங்கே காட்டப்பட்டுள்ள மற்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் குறிப்பிட்ட உதாரணங்களின் எண்ணிக்கைகளுடன் இருந்தபோதிலும் பூரணமாகத் தரப்படவில்லை.அறிக்கையின் பிரிவு II: 2019 வரவு செலவுத் திட்டப் பகுப்பாய்வுவரவு செலவுத்திட்டத்தில் காணப்படும் தவறவிடப்பட்ட கணிப்பீடுகள் மற்றும் கணிப்பீடுகளின் பொருந்தாமை பற்றிய விடயங்களை ஆராய்கிறது.

## பிரிவு II: 2019 வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு பகுப்பாய்வு

### 1. காணாமல் போன மதிப்பீடுகள்

**காணாமல் போன மதிப்பீடுகள்**: வரவு செலவு திட்டம் திட்டங்களைப் பற்றிய நிதி விளைவுகளின் மதிப்பீடுகள் 2019 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட மற்றும் / அல்லது அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் காட்டப்படாமல் இருத்தல் அல்லது மறைக்கப்பட்டிருத்தல் என்பது பொருளாகும்

காணாமல் போன மதிப்பீடுகள் பற்றிய சிக்கல் இந்த பிரிவில் இரண்டு முக்கிய பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதியானது நிதி நடவடிக்கைகளினல் காட்டப்படாமல் இருந்த அல்லது மறைக்கப்பட்டிருந்த தகவல் விளைவுகள் பற்றிய எடுத்துக்காட்டுக்களைக் காட்டுகின்றது. இரண்டாவது பகுதியானது காணாமல்போன தகவல்களின் எதிர்மறையான மற்றும் நேர்மறையான நிதி நடவடிக்கைகள் பற்றிய எடுத்துக்காட்டுக்களைக் காட்டுகின்றது. முதல் பகுதியில், பந்தயம் மற்றும் சூது மீதான வரி தொடர்பாக தகவல் எவ்வாறு வழங்கப்படுகிறது என்பது பற்றி ஒரு சம்பவக்கற்கை மூலம் காட்டப்படாமல் இருந்த அல்லது மறைக்கப்பட்டிருந்த தகவல் விளைவுகள் பற்றி தெளிவுபடுத்துகின்றது.

### 1.1. வெளிப்படையான அல்லது மறைமுகமான விளைவுகளுடனான நிதி நடவடிக்கைகள்

ஒன்றில் காட்டப்படாமல் இருந்த அல்லது மறைக்கப்பட்டிருந்த வருவாய் அல்லது செலவின தகவல்களின் விளைவுகளினால் சில நிதி நடவடிக்கைகள் பற்றிய எடுத்துக்காட்டுக்களை காட்டுகின்றது. பகுதி 1.1.1 இந்த சிக்கலின் பல எடுத்துக்காட்டுகளுடன் ஒரு அட்டவணை வழங்குகிறது. பாராளுமன்றத்திற்கு மிகக் குறைந்த தகவல்கள் வழங்கப்படுவது மட்டுமல்லாமல் , வழங்கப்பட்ட தகவலின் தன்மையால் பாராளுமன்றம் தவறாக வழிநடத்தப்படுவது பற்றிய ஒரு சுருக்கமான சம்பவக்கற்கை ஒன்றினை பிரிவு 1.1.2 வழங்குகிறது.

1.1.1 வெளிப்படுத்தப்படாத விளைவுகள் : சுட்டிக்காட்டும் உதாரணங்கள்

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத்திட்டத்தில் கொள்கை முன்மொழிவு | அவதானிப்பு |
|---|---|---|
| வருவாய் விளைவு | மருத்துவ இயந்திரங்கள் VAT சட்டம் (பந்தி 2.5, பகுதி 1, பின்னிணைப்பு - IX, வரவு செலவுத்திட்ட உரை 2019)இற்காக மீள வரையறுக்கப்பட்டது | VAT வருவாயில் இது நேர்மறை, எதிர்மறை அல்லது நடுநிலை தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்த எந்தவொரு தகவலும் வரவு செலவுத்திட்டத்தில் தரப்படவில்லை |

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத்திட்டத்தில் கொள்கை முன்மொழிவு | அவதானிப்பு |
|---|---|---|
| வருவாய் விளைவு | - "உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட அரிசி தயாரிப்புக்கள்" என்கிற பதம் தளிவு மற்றும் உறுதிக்காக மீள் வரையறுக்கப்படும் (பந்தி 2.5, பகுதி 1, பின்னிணைப்பு - IX, வரவு செலவுத்திட்ட உரை 2019) | - VAT வருவாயில் இது நேர்மறை, எதிர்மறை அல்லது நடுநிலை தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்த எந்தவொரு தகவலும் வரவு செலவுத்திட்டத்தில் தரப்படவில்லை |
| வருவாய் விளைவு | மாதாந்தம் 50000/- க்கு மேற்படாத, வருடாந்த வரி மதிப்பீட்டில் ரூபா 500,000 க்கு உட்பட்ட, நாட்டில் வாழும் தனிநபருக்கு வழங்கப்படும் எந்தவொரு உரிமைத்தொகையும் WHTயிலிருந்து வரிவிலக்களிக்கப்படும். (பந்தி 1.2.1, பகுதி 1, பின்னிணைப்பு - IX, வரவு செலவுத்திட்ட உரை 2019) | - வருமான வரி வருவாயில் இது நேர்மறை, எதிர்மறை அல்லது நடுநிலை தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்த எந்தவொரு தகவலும் வரவு செலவுத்திட்டத்தில் தரப்படவில்லை |
| வருவாய் விளைவு | குளிர்சாதனப் பெட்டிகளின் தீர்வை வரி 25%ஆக மாற்றியமைக்கப்படும் ( பந்தி 6.1.4, பகுதி 1, பின்னிணைப்பு - IX, வரவு செலவுத்திட்ட உரை 2019) | வரவு செலவுத்திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட "மாற்றியமைக்கபட்ட என்ற பதம் உதவுவதாகவில்லை. அது மாற்றியமைக்கப்பட்ட திசையினை உருமறைக்க உதவக்கூடியது. இந்த சந்தர்ப்பத்தில் குளிர்சாதனப் பெட்டிகளின் தீர்வை வரியானது அதிகரிக்கப்படவே சந்தர்ப்பம் உள்ளது. ஆனாலும் வருவாய்களின் விளைவு பற்றிய எந்தவொரு தகவலும் இந்த முன்மொழிவில் குறிப்பிடப்படவில்லை |
| வருவாய் விளைவு | (5) சுற்றுலா ஒழுங்குபடுத்துனர்களின் மீதான NBTயின் ஒழுங்கற்ற தன்மையை அகற்றுவதற்காக, அன்னியச் செலாவணிகளைப் பெற்றுவரும் DMC முகவரிகள் | இந்தக் குறிப்பிட்ட NBT மறுசீராக்கம் பற்றிய சுட்டிக்காட்டல் தெளிவானதாகவில்லை, முன்மொழிவு தெளிவில்லாமல் இருப்பதே இதற்கான பகுதியளவான காரணம் |

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத்திட்டத்தில் கொள்கை முன்மொழிவு | அவதானிப்பு |
|---|---|---|
| | மற்றும் விருந்தகங்களின் நடைமுறை சரிப்படுத்தப்படும் | |
| வருவாய் விளைவு | கசினோ அனுமதிக் கட்டணம் நபருக்கு USD 50 ஆக மறுசீரமைக்கப்படும் (பந்தி 7.2, பகுதி 1, பின்னிணைப்பு - IX, வரவு செலவுத்திட்ட உரை 2019) | இந்தப் பகுதியில் காணப்படும் நிகழ்நிலைக் கற்கை நெறியை குறிப்புகள் மற்றும் அவதானங்கள் பற்றி பார்க்கவும் |
| வருவாய் விளைவு | "ருட்ஜினோ விளையாட்டை தொடர்ந்து விளையாடும் வர்த்தகத்துக்கான வருடாந்த தீர்வை ரூபா. 1 மில்லியனாக மறுசீரமைக்கப்படும் " | இந்தப் பகுதியில் காணப்படும் நிகழ்நிலைக் கற்கை நெறியை குறிப்புகள் மற்றும் அவதானங்கள் பற்றி பார்க்கவும் |

### 1.1.2 நிகழ்நிலைக் கற்கை : பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வை

வரவு செலவுத்திட்டத்தில் பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வையினால் கிடைக்கும் வருவாய் பற்றி அறிக்கையிடப்பட்டுள்ள விதம்,வரவு செலவுத் திட்டத்தின் செயற்பாடுகளில் வழங்கப்படும் தகவல்கள் எவ்வாறு முக்கியமான பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதைக் காட்டும் நிகழ்நிலைக் கற்கை ஒன்றை வழங்குகிறது.

பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வை பற்றிய நிகழ்நிலைக் கற்கையானது நாடாளுமன்றமானது எவ்வாறு தவறாக வழிநடத்தப்படலாம் என்பதை இரு முறைகளில் எடுத்துரைக்கிறது.(A) கொள்கை மாற்றத்தில் தவறாக வழிநடத்தியது.(B) நிதி நடைமுறைகளில் தவறாக வழிநடத்தியது. குழுவானது தனது பரிந்துரைகளுக்கு இந்தப் பிரிவின் இறுதியில் நாடாளுமன்றத்தின் கவனத்தைக் கோருகிறது.

**<u>அ. நாடாளுமன்றம் கொள்கை மாற்றத்தில் தவறாக வழிநடத்தப்பட்டது</u>**

குழுவானது பந்தயம் மற்றும் சூதாட்ட தீர்வையின் கொள்கை மாற்றங்கள் குறித்த திசையில் சில பாகங்கள் பற்றி, வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்ட தகவல்கள், நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடத்தும் அம்சங்களைக் கொண்டிருந்ததைக் கண்டறிந்தாலும்,தீர்வைக் குறைப்பானது மேலதிகக் கட்டணங்களாக வழங்கப்பட்டிருந்தது.

வரவு செலவுத் திட்ட உரையின் பந்திகள் 207 மற்றும் 208 முன்மொழிவுகளைப் பின்வருமாறு குறிப்பிடுகிறது :

- 207. கசினோக்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை ரூபா.200 மில்லியனிலிருந்து ரூபா.400 மில்லியனாக அதிகரிப்பதும், ருட்ஜினோ விளையாட்டுக்களுக்கு வருடாந்தம் ரூபா. 1 மில்லியனாக அதிகரிப்பதும். கசினோ வருமான தீர்வை 15% ஆக அறவிடப்படும். இந்தப் புதிய

கட்டணங்கள் 2019 ஏப்ரல் முதலாம் திகதி முதல் அமுலாகும்.

- 208. கசினோ நுழைவுக் கட்டணமாக நபர் ஒருவருக்கு USD 50, 2019 ஜூன் முதலாம் திகதி முதல் அறவிடப்படும்.

207வது பந்தியின் சொல்லமைப்பானது, ருட்ஜினோ விளையாட்டுக்கு அனுமதி பத்திரக் கட்டணம் வருடாந்தம் ரூபா. 1 மில்லியன் எனக் குறிப்பிடுவதன் மூலம் முன்பிருந்ததை விட அதிகரித்திருப்பதாக ஒரு தோற்றப்பாடு (சிலவேளை தற்செயலாக) உருவாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) பதிவுசெய்ததன் அடிப்படையில் முன்பிருந்த கட்டணம் வருடாந்தம் ரூபா.200 மில்லியன்.

208வது பந்தியின் சொல்லமைப்பானது, நபர் ஒருவருக்கு USD 50 ஒரு புதிய ஏற்பாடு என்ற ஒரு தோற்றப்பாடு (சிலவேளை தற்செயலாக) உருவாக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், IRD சட்டப்படி, முந்தைய நிலையில், தற்போது ஒருவருக்கு USD 100 கட்டணம் நிலவுவதாகப் பதிவு செய்துள்ளது.

வரவு செலவுத்திட்ட உரையின்(பின்னிணைப்பு IX, பக்.68) தொழிநுட்பக் குறிப்புக்கள், இந்த முன்மொழிவுகளை பந்தய, சூதாட்டத்த தீர்வை சட்டத்தின் 1988, 40ஆம் இலக்கத்திற்கு நான்கு முன்மொழியப்பட்ட திருத்தங்களாக விளக்குகிறது. ஐயப்பாடான சொல்லான மறுசீரமைக்கப்பட்ட என்பது தொடர்ச்சியாக இந்த மூன்று நடவடிக்கைகளையும் விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது - இரு மறுசீரமைப்புகள் 1 மற்றும் 4 வரி அதிகரிப்புக்கள், மறுசீரமைப்புக்கள் 2 மற்றும் 3 வரிக்குறைப்புக்கள் என்று குறிப்பிடத் தவறியுள்ளது.

**வருடாந்த தீர்வை மறுசீராக்கம்**

- ருட்ஜினோ விளையாடுவதை விட மற்ற சூதாட்டங்கள் ஆடப்படுவதை வியாபாரமாக முன்னெடுப்பதற்கு வருடாந்தத் தீர்வை ரூபா.400 மில்லியனாக **மறுசீராக்கம்.**
- ருட்ஜினோ விளையாட்டைத் தொடர்ந்து வியாபாரமாகி கொண்டு நடத்துவதற்கு வருடாந்தத் தீர்வை ரூபா.1 மில்லியனாக மறுசீராக்கம்.

**கசினோ நுழைவுக் கட்டண மறுசீராக்கம்**

- கசினோ நுழைவுக் கட்டணமானது நபரொருவருக்கு US $ 50ஆக மறுசீராக்கம்.

**மொத்த சேகரிப்பின் மீதான வரி மறுசீராக்கம்**

- மொத்த சேகரிப்பின் மீதான வரி 15% ஆக மறுசீராக்கப்படும்

இந்தக் கொள்கை மாற்றங்களில் முற்கூட்டியே ஏதாவது நாடாளுமன்ற செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தாலோ,அல்லது நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படாமல் ஏதாவது மாற்றங்கள் நிகழ்ந்திருக்குமாயின், குழு இதைப்பற்றி அறிந்திருக்காது.

## B. நிதி நடவடிக்கைகளில் நாடாளுமன்றம் தவறாக வழி நடத்தப்பட்டமை

பந்தய, சூதாட்ட தீர்வைக்கு செய்யப்பட்ட சில திருத்தங்கள் பற்றி வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் நிதி நடவடிக்கைகளின்பால் நாடாளுமன்றத்தைத் தவறாக வழிநடாத்தியமையைக் குழு கண்டறிந்ததோடு,

பெறக்கூடிய வருவாயைக் குறைப்பதற்கான நடவடிக்கைக்களாகவே அமைகின்ற வேளையில், நாடாளுமன்றத்தில் அதற்கு எதிராகவே விளைவுகள் அமையுமென்பதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. MOF 2019 மார்ச் 11 அன்று குழுவுக்கு வரவு செலவுத்திட்டத்தை வரைமுறைப்படுத்தும், பந்தய, சூதாட்ட தீர்வையில் மாற்றங்களை செய்வதற்கான புதிய நடைமுறையின் கூறுகளையும்,அவை ஒவ்வொன்றின் மூலமாகவும் மதிப்பிடப்படும் வருவாய்த் தாக்கம் பற்றியும் வழங்கியது.இந்தத் தகவல்கள் வரவு செலவுத் திட்டத்துடன் முன்னதாக நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

கீழேயுள்ள அட்டவணையானது அந்தத் தகவல்களிலிருந்தும், அதேவேளை இணையத்தில் IRD மூலம் வழங்கப்பட்டுள்ள முன்னைய பெறுமதிகள் மூலமாகவும் தொகுக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட மறுசீராக்கங்கள் (2019 வரவு செலவுத்திட்டம்)

| இல. | பந்தய, சூதாட்ட தீர்வையின் உப கூறு | முன்னைய நிலை பெறுமதி (IRD) | முன்மொழியப்பட்ட பெறுமதி (வரவு செலவுத்திட்டம்) | வருவாயில் நிதித்திட்டமிட்ட மாற்றம் (MOF) |
|---|---|---|---|---|
| 1 | ருட்ஜினோ விளையாடுவதை விட மற்ற சூதாட்டங்கள் ஆடப்படுவதை வியாபாரமாக முன்னெடுப்பதற்கு வருடாந்தத் தீர்வை | ரூபா 200 மில்லியன் | ரூபா 400 மில்லியன் | ரூபா 800 மில்லியன் அதிகரிப்பு |
| 2 | *ருட்ஜினோ விளையாட்டைத் தொடர்ந்து வியாபாரமாகி கொண்டு நடத்துவதற்கு வருடாந்தத் தீர்வை* | ரூபா 200 மில்லியன் (IRD உத்தியோகபூர்வ இணையத்தின்படி) | Rs. 1 million | ரூபா 10 மில்லியன் அதிகரிப்பு |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | கசினோ நுழைவுக் கட்டணம் | நபரொருவருக்கு US$ 100 (IRD உத்தியோகபூர்வ இணையத்தின்படி) | நபரொருவருக்கு US$ 50 | ரூபா 980 மில்லியன் அதிகரிப்பு |
| 4 | மொத்த சேகரிப்பின் மீதான வரி - | 10% | 15% | ரூபா. 780 மில்லியன் அதிகரிப்பு |

இணைப்பு : *http://www.ird.gov.lk/en/Type%20of%20Taxes/SitePages/Betting%20and%20Gaming%20Levy.aspx?menuid=1212*.

இணையத்தில் 2019 மார்ச் 17 அணுகப்பட்டது.

தீர்வைக் குறைப்பானது காட்டப்பட்ட, வரவு செலவுத்திட்டத்தில் அளிக்கப்பட்ட தவறான/தெளிவற்ற அளிக்கை, பின்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி வருவாய்க் குறைவுக்குப் பதிலாக வருவாய் அதிகரிப்பை விளைவாய்க் காட்டுவதும் சேர்ந்துகொள்கிறது. இந்த முரண்பாட்டுக்கு முக்கியமான காரணமாகக் கருத்தப்படக்கூடியதாக குழுவினால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

IRD 3 மற்றும் 4 ஆகியவற்றில் வரிகளை வசூலிப்பதில் தவறியுள்ளதனால், குறைவான வரிகளை அமுல்படுத்தினாலும், அதை சேகரித்தால் அதுவும் கூட வருவாயில் அதிகரிப்பைக் காட்டும் என்பதாகும். எவ்வாறாயினும், அப்படியான நிலையிலும்,சரியான

அத்தகைய வருவாயை அதிகரிப்பதன் மூலம், அதை சரிசெய்யும் நடவடிக்கைகளுக்கு இது பொருந்தும் வரிகளை சேகரிக்கத் தவறியது, வரிக்குறைப்பு அளவைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையை இது குறிக்காது.1

**பரிந்துரை**

- இந்த வரிகள் அறவிடப்படும் 14 நிலையங்களே - 4 கசினோ நிலையங்கள், 14 ருட்ஜினோ இடங்கள் இருப்பதை குழு அவதானித்தது (MOF இனால் வழங்கப்பட்ட தகவல்களின் படி)

  கடந்த வருடங்களில் இந்த நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப்படாத வருவாய்களையும் அரசாங்கம் அறவிடும் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது பற்றி நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவேண்டும்.

- அதேபோல, கடந்த வருடங்களில் பெறப்படாத வரிகளின் மூலமான வருவாய்களையும் மதிப்பிட்டு, புதிய வருவாய் நடைமுறை ஒன்று வரவு

---

[1] உதாரணத்துக்கு, நிறுவன வரி சம்பந்தமாக இது குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், வரி நிர்வாகத்தை வலுப்படுத்தும் RAMIS கீழ் தணிக்கை இந்த வரி வருவாய் அதிகரிக்கும் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது

செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

- பல ஆண்டுகளாக இந்த வரிகளை பெற்றுக்கொள்ளத் தவறிய, இதன்மூலம் மிக அதிகப்படியான வருவாய் இழப்பை அரசாங்கத்துக்கு ஏற்படுத்திய பொறுப்புக்குரிய அதிகாரிகள் மேல் விசாரநகை மேற்கொண்டு, தேவையான நடவடிக்கைகளை எடுக்க/பரிந்துறைக்க நாடாளுமன்றத்துக்கு கடமையிருக்கிறது.

- பந்தயம் , சூதாட்ட தீர்வை தொடர்பான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் ஏற்படுத்தக்கூடிய சேகரிக்கப்பட்ட வருவாய் குறைக்கப்படும் அல்லது சேர்க்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளிலிருந்தும் ஏற்படக்கூடும் நாடாளுமன்றத்துக்கு சரியான மற்றும் தனித்தனி மதிப்பீடுகளை கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

- பந்தயம் சூதாட்ட தீர்வையின் திருத்தங்களின் சட்ட உட்குறிப்பு குறித்து நாடாளுமன்றம் தெளிவுபடுத்தப்படுவதோடு,

புதிய நடவடிக்கைகள் மூலம் வெளிக்காட்டப்படாத மன்னிப்பு அல்லது சேகரிக்கப்பட வேண்டிய, செலுத்தப்படாத வரிகளில் குறைப்பு

வழங்குவதற்கு சேவை செய்யாது என்று உறுதியளிக்கப்படும்.

- நாடாளுமன்றம் பந்த சூதாட்டத்த தீர்வை பற்றிய முழுமையான தகவல்களை வெளிப்படுத்திய பின்னர், கணிசமானளவு குறைப்புக்களை ஏற்படுத்தும் முன்மொழிவுகளை பற்றி பிரத்தியேகமான வாக்களிப்பை நடத்தவேண்டும்.

### 1.2 தவறவிடப்பட்ட தகவல்களுடனான எதிர்மறை நிதி நடவடிக்கைகள்

இந்தப் பிரிவானது எதிர்மறை நிதித் தாக்கத்தை ஏற்படுத்திய, ஆனால் இந்தத் தாக்கத்தின் சரியான அளவுகள் வழங்கப்படாத, நிதி நடவடிக்கைகளை வெளிப்படுத்துகிறது. வரவு செலவுத்திட்ட செயன்முறைகளின் பிரதான நோக்கம் அரசாங்கத்தின் கொள்கைகள் எவ்வாறு நிதி முகாமைத்துவத்தில் தாக்கம் செலுத்துகின்றன என்பதை நாடாளுமன்றம் புரிந்துகொள்வதற்காகவே. எனவே, ஒவ்வொரு பரிந்துரையும் மிதித்த தாக்கத்தின் மதிப்பீட்டில் முறையாகக் கணிப்பிட்டிருப்பது கட்டாயமாகும். அவ்வாறில்லாமல் நாடாளுமன்றமானது வரவு செலவுத் திட்டத்தில் முடிவுகளை எடுக்க முடியாதளவுக்கு பபோதியளவு புரிந்துணர்வு இருக்காது. நாடாளுமன்றத்துக்கு இந்தத் தகவல்களை வழங்குவதில் தவறுவதானது நாடாளுமன்றம் முறையான விதத்தில் தனது செயற்பாட்டை முன்னெடுப்பதைத் தடுக்கிறது.

### 1.2.1. வருவாயைக் குறைக்கும் முன்மொழிவுகள்

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் முன்மொழிவு | தவறவிடப்பட்ட மதிப்பீட்டில் குறிப்புக்கள் |
|---|---|---|
| வருவாய் இழப்பு | வருவாய் இழப்பு - மது வரிக் குறைப்பு, சீனியளவு மற்றும் சுவையூட்டப்பட்ட பானங்களுக்கும் (பழச்சாற்றை அடிப்டையாகக் கொண்ட மற்றும் கார்பனேட்டட் வகையும்) பொருந்தும் | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை |
| வருவாய் முன்பே தீர்மானிக்கப்பட்டது | - வர்த்தகப் பாவனைக்குரிய வாகனங்களுக்கு அதிகபட்ச கார்பன் வரியை அறவிடல் (பந்தி 8.1 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | முன்பிருந்த பெறுமதி வழங்கப்படாததால் வருவாய்க்கு குறைப்பு எதிர்பார்க்கப்பட்டது |
| வருவாய் இழப்பு | சர்வதேசத் தொலைத்தொடர்பு இயக்குனர்களின் தீர்வையை அகற்றுதல் (பந்தி 8.3 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை |
| வருவாய் இழப்பு + முன்பே தீர்மானிக்கப்பட்டது | இலங்கையில் குடியிராத எந்த ஒருவரதும் இறையாண்மைக்குரிய பிணை முறிக்கும், அது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்திலும் விலக்கு வழங்கப்படும்; மற்றும் அவை மூலம் பெறப்படும் வட்டிக்கும், அத்துடன் அனைத்து இலங்கை அபிவிருத்தி பிணை முறிக்கும் (பந்தி 1.1.2 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை சேமிப்பு/பிணை முறி சந்தைகளில் ஏற்பட்ட நடத்தை மாற்றங்கள் காரணமாக வருவாயில் இழப்பு எதிர்பார்க்கப்பட்டதும் வழங்கப்படவில்லை |
| வருவாய் இழப்பு + முன்பே தீர்மானிக்கப்பட்டது | இலங்கையிலுள்ள எந்தவொரு தனி நபருக்கும் இலங்கைக்கு வெளியேயுள்ள எந்தவொரு நபரினாலும் வழங்கப்படும் கடனுக்கான வட்டிக்கு | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை சேமிப்பு/பிணை முறி சந்தைகளில் ஏற்பட்ட நடத்தை |

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் முன்மொழிவு | தவறவிடப்பட்ட மதிப்பீட்டில் குறிப்புக்கள் |
|---|---|---|
| | விலக்களிக்கப்படும். இந்த விலக்களிப்பானது இலங்கையைச் சாராத நிறுவனமொன்றினால் இலங்கையிலுள்ள அதன் சார்புவைப்பு நிறுவனம் அல்லது அதன் ஒரு துணை நிறுவனத்துக்கு வழங்கப்படும் கடன்களுக்கு பொருந்தாது (பந்தி 1.1.5 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | மாற்றங்கள் காரணமாக வருவாயில் இழப்பு எதிர்பார்க்கப்பட்டதும் வழங்கப்படவில்லை |
| வருவாய் இழப்பு | ஐந்து வருடங்களுக்கு NRFC மற்றும் RFC கணக்குகள் மூலமாக ஒருவர் ஈட்டும் வருமானங்களின் வட்டிக்கு விலக்களிப்பு (பந்தி 1.1.3 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை |
| வருவாய் இழப்பு | எந்தவொரு நிதியியல்நிறுவனத்திலும் பேணப்படும் வைப்புக் கணக்குகளின் மூலம் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளினால் ஈட்டப்படும் மாதத்துக்கு ரூபா .5000 வரையிலான தொகைக்கு வட்டி விலக்களிப்பு - (பந்தி 1.1.4 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை<br><br>சேமிப்புச் சந்தைகளில் ஏற்பட்ட நடத்தை மாற்றங்கள் காரணமாக வருவாயில் இழப்பு எதிர்பார்க்கப்பட்டதும் வழங்கப்படவில்லை |
| வருவாய் இழப்பு | - IT வர்த்தகத்தில் வருமானத்தைக் கணக்கிடும்போது சம்பளச் செலவில் 35%க்கு சமனாக மேலதிகக் குறைப்பு செய்வதற்குத் தகுதி பெறும் எண்ணைக்கையாக குறைந்த பட்சம் 50 ஊழியர்கள் | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை |

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் முன்மொழிவு | தவறவிடப்பட்ட மதிப்பீட்டில் குறிப்புக்கள் |
|---|---|---|
| | என்பதை அகற்றுதல் (பந்தி 1.3 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) - சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை | |
| வருவாய் இழப்பு | இரு முன்மொழிவுகள் : தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இரத்தினக்கல் மெருகூட்டும் சேவை வழங்குவோருக்கு கடினமான, சேதுக்காத இரத்தினக்கற்களை மீள ஏற்றுமதி செய்வதற்காக இறக்குமதித் தீர்வை வழங்கப்படும்; உள்ளகக் கட்டமைப்பின் செலவீனம், பிறந்தான் கட்டட ஒப்பந்தக்காரருக்கு NBT அகற்றப்பட்டதன் மூலம் குறைகிறது (பந்தி 3.1 மற்றும் 3.3 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) - | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை |
| வருவாய் பின்விளைவு | வரி சலுகைகள் மூலமாக இப்போதிருக்கும் வர்த்தகங்களுக்கு முதலீட்டு சலுகைகள் வழங்கப்படுதல் : இப்போதிருக்கும் வர்த்தகங்கள் மூலம் செய்யப்படும் புதிய முதலீடுகளுக்கு வழமையான தேய்மானமாக இல்லாமல், வேகப்படுத்தப்பட்ட தேய்மானத்தின் படி (பந்தி 1.4 - பகுதி 1 - பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | சேகரிப்படக்கூடிய வருவாயின் இழப்பின் அளவு தரப்படவில்லை<br><br>சேமிப்புச் சந்தைகளில் ஏற்பட்ட நடத்தை மாற்றங்கள் காரணமாக வருவாயில் இழப்பு எதிர்பார்க்கப்பட்டதும் வழங்கப்படவில்லை |

### 1.2.2. செலவீன முன்மொழிவுகள்

| தவறவிடப்பட்ட தகவல் | வரவு செலவுத் திட்டத்தில் வருவாய் முன்மொழிவு | அவதானிப்பு |
|---|---|---|
| அரசாங்கத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட செலவு | அத்தாட்சிப்படுத்தப்பட்ட தரக்கட்டுப்பாட்டு சோதனைகளில் தோல்வியுற்ற சினமன் எக்ஸ்போர்ட்டர்ஸ், அடுத்த 12 மாதங்களில் தங்களுடைய தொழிற்பாடுகளை மேம்படுத்திக்கொள்ள ஏற்றுமதி சந்தை அணுகுமுறை நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக ஆதரவு வழங்கப்படும். EDB இதற்கு உதவி வழங்கும். (பந்தி 32, வரவு செலவுத்திட்ட உரை 2019) | - இந்தப் புதிய முன்மொழிவினால் அரசாங்கம் எதிர்கொள்ள எதிர்பார்க்கப்படும் செலவினம் தரப்படவில்லை |
| அரசாங்கத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட செலவு | - பாடசாலைக்குப் பின்னதான மற்றும் விடுமுறை மையங்கள் (ACVC) ஆகியவற்றைப் பாடசாலைக்குள்ளேயே அமைக்க தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு உதவி வழங்கப்படும் (பந்தி 46, வரவு செலவுத்திட்ட உரை 2019) | - இந்தப் புதிய முன்மொழிவினால் அரசாங்கம் எதிர்கொள்ள எதிர்பார்க்கப்படும் செலவினம் தரப்படவில்லை |
| அரசாங்கத்துக்கு எதிர்பார்க்கப்பட்ட செலவு | பிரசவகால விடுமுறை செலவுகள், பிரசவகால விடுமுறை அளிக்கப்பட முதல் மூன்று மாதகாலத்தின் சம்பள செலவில் 50% உதவி நிதியளிக்கப்படுவதோடு, நான்காவது மாதத்தில் 100% ஆகும். ஊழியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு அதிகபட்சமாக ரூபா.20000 வரையாக. (பந்தி 48, வரவு செலவுத்திட்ட உரை 2019) - | - இந்தப் புதிய முன்மொழிவினால் அரசாங்கம் எதிர்கொள்ள எதிர்பார்க்கப்படும் செலவினம் தரப்படவில்லை |

### 1.3 தவறவிடப்பட்ட தகவல்களுடனான நேர்மறை நிதி நடவடிக்கைகள்

இந்தப் பிரிவானது நேர்மறை நிதித் தாக்கத்தை ஏற்படுத்திய, ஆனால் இந்தத் தாக்கத்தின் சரியான அளவுகள் வழங்கப்படாத, நிதி நடவடிக்கைகளை வெளிப்படுத்துகிறது. சொத்து சந்தையில் உயரிய ஆற்றாலாதாயம் மற்றும் வணிக நடவடிக்கைகளின் பெறுமதிகள் காரணமாக VAT இந்த மீதான இந்நடவடிக்கையானது நிதி நிலவரத்தை மீது மிகக் கணிசமானளவு தாக்கத்தை

ஏற்படுத்தும். இந்த முன்மொழிவானது முன்னைய வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு,பின்னர் பல்வேறு இடர்கள் காரணமாக அரசாங்கத்தினால் பிற்போடப்பட்டதாகும்.எனவே இந்த முன்மொழிவின் பிரத்தியேக கணக்கிடப்படக்கூடிய காரணிகளின், நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் தகவல்களின் உட்பிரிவில் தீவிர சான்றாதாரத்துடன் வழங்கவேண்டியது இன்றியமையாததாகிறது. உதாரணமாக : இந்த முன்மொழிவைப் பிற்போடுவதற்கு காரணமாக இருந்த இடர்கள் எவை ?இப்போது அவ்விடர்கள் எவ்வாறு கருத்தில்கொள்ளப்படவுள்ளன ? சொத்து சந்தையில் இந்த நடவடிக்கையினால் எதிர்பார்க்கப்படும் பொருளாதாரத் தாக்கம் என்ன? இந்நடவடிக்கையின்எதிர்பார்க்கப்படும் நிதித் தாக்கம் என்ன ? VAT வருவாயில் எதிர்பார்க்கப்பட்டு. நாடாளுமன்றத்துக்கு முன்மொழியப்பட்ட நடவடிக்கையின் அடிப்படையில் பிரத்தியேகமான நிதி தாக்கத்தின் மதிப்பீட்டில் வழங்குவதும் சமனாகாதுஎன்பதை மதிப்பீடுகள் தரும் விடயம், அத்துடன் கணிப்பீடுகள் செய்யப்படுவதன் மூலம் பொருளாதார பகுப்பாய்வுகள் இந்த முன்மொழிவுகளை புரிந்து ஏற்கப்படமுதல்செய்யப்படவேண்டும்.

### 1.3.1 வருவாய் உருவாக்கும் திட்டங்கள்

| தவறவிடப்பட்ட தகவல்கள் | வரவு செலவுத்திட்டத்தில் வருவாய் முன்மொழிவு | அவதானிப்பு |
|---|---|---|
| வருவாய் அதிகரிப்பு | அடுக்குமாடி வீட்டுத் திட்டங்களை வழங்குவதன் மீதான VAT 2019 ஏப்ரல் மாதம் 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும், அத்துடன் அவற்றை வழங்கும் ஒப்பந்த உறுதி ஏப்ரல் 1, 2019க்கு முன்னதாக செயற்படுத்தப்படாமல் (பந்தி 2.3, பகுதி 1, பின்னிணைப்பு IX , வரவு செலவுத்திட்ட உரை 2019) | - இந்தப் புதிய முன்மொழிவினால் அரசாங்கம் எதிர்கொள்ள எதிர்பார்க்கப்படும் செலவினம் தரப்படவில்லை |

## 2. பொருந்தாத மதிப்பீடு

பொருந்தாத மதிப்பீடு: வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் கடந்த தரவுடன் அல்லது நிதி நிலை, நிதி மற்றும் பொருளாதார அனுமானங்களை வழங்குவதில் தோல்வியுற்றால் அது பொருந்தாத மதிப்பீடுகளாகும்.

வருமான மதிப்பீடுகளானவை, வழங்கப்பட்ட வருமானத்திற்கு அப்பால் செல்லும் வகையில், வரிவிதிப்பின் பல பகுதிகளின் உதாரணங்களை இந்த பிரிவு குறிப்பிடுகின்றது. பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட குறிப்பிட்ட மதிப்பீட்டோடு தொடர்புடைய குறிப்பிட்ட அறிக்கையில், குழுவின் கடந்தகால அறிக்கைகள் இந்த கருத்துக்களை ஒரு குறிப்பிட்ட முறையில் வெளிக்கொணர்ந்தன. பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட மதிப்பீடுகளைக் காட்டிலும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட மாற்று மதிப்பீடுகள் கணிசமாக மிகவும் துல்லியமாக இருந்தன என்பதை குழுவின் கடந்த ஆண்டு அறிக்கை சுட்டிக்காட்டியது.

அதிகமான வருமான மதிப்பீடுகள் பாராளுமன்றத்தை உயர் செலவின அளவை ஏற்றுக் கொள்ள வழிவகுக்கும். அதன் பின்னர் வருமானம் எதிர்பார்ப்புக்களை அடையாத போது அதிக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைகள், உயர் கடன், உயர் வட்டி இறுதியாக பொது மக்கள் நிதியின் நிலைபேறுத் தன்மைக்கு சவாலாக அமையும். ஆகவே, அதிக மதிப்பீட்டின் இந்தப் பிரச்சனைக்கு சிறப்பு விழிப்புணர்வு தேவைப்படுகின்றது. ஏனெனில் அது பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் திட்டமிடப்பட்ட விடயமாக இருப்பதனாலாகும். பல ஆண்டுகளில் இது அதிகரித்து வரும் கடன்களிற்காகவும் அதனை முகாமை செய்வதற்காகவும் சர்வதேச சவால்களை முகங்கொடுப்பதில் பின்னடைவை சமாளிப்பதற்காகவும் பாராளுமன்றம் செலவுத் திட்டங்களை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு இட்டுச் செல்லும்.

2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படக் கூடிய திருத்தமான நடவடிக்கைகளின் மீது ஒவ்வொரு வகையாக வரிகளிற்கும் குறிப்பிட்ட *பரிந்துரைகளை* குழு வழங்கியுள்ளது.

2.1. நீங்கள் ஈட்டும் வருமானத்திற்கு ஏற்ப கட்டணம் செலுத்துங்கள் (PAYE ) வரி

ஏற்கனவே உள்ள கொள்கைகளுக்கு ஏற்ப 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வரிகளில் மதிப்பிடப்பட்ட 41 பில்லியனிலிருந்து 2019 ஆம் ஆண்டில் ( PAYE) வரி 57% அதாவது 65 பில்லியனாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வரிப் பிரிவுகள் கணக்கில் 3.1% வரி வருமானமாக காண்பிக்கும்.

ஆய்வுகள்

*<u>(PAYE) வரி மதிப்பீடுகள்</u>*

*இலங்கை ரூபாய் மில்லியன்கள்*

| வரி மாதிரி | வருமான மதிப்பீடுகள் | | | 2018 இல் இருந்தான அதிகரிப்புக்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 தற்காலிக மதிப்பீடு | 2019 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2018 இல் இருந்தான மொத்த மாற்றம் | Y-o-Y % வருமான அதிகரிப்பு | பெயரளவு வளர்ச்சிக் கான காரணம் | கொள்கை மாற்றம் மற்றும் சிறந்த நிர்வாகத்திற் கான காரணம் |
| PAYE TAX | 41,385 | 65,000 | 23,615 | 57.1% | 3,311<br>(8.0%) | 20,305<br>(49.1%) |

*வளங்கள்: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள் ) இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்*

PAYE இன் சேகரிப்பில் அதிகரிப்பிற்கு பின்னணியில் ஏனைய வரிகளிற்கு வழங்கப்பட்ட பொதுவான காரணத்தை பின்வருமாறு விளக்குகின்றது. உள்நாட்டு இறைவரிச் சட்ட விகித மாற்றங்கள் சம்பந்தப்பட்ட முழு வருமானத்தின் அதிகரிப்பிற்கு பங்களிக்கும். புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் குறிப்பாக PAYE வரிக்கு 2018

இற்குள் 8 மாதங்களுக்கு மட்டுமே பொருந்தும். அதே நேரத்தில் அது 2019, 12 மாதங்களிற்கு விண்ணப்பிக்கலாம்.

கடந்த கால அனுபவங்கள் (2013-2017)

| அண்ணளவான வருடாந்த வளர்ச்சி வீதம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட பட்ஜெட் மதிப்பீடுகளிலிருந்து சராசரி குறுகிய வீழ்ச்சி | 2018 ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மேலதிக மதிப்பீடு எதிராக 2018 தற்காலிக மதிப்பீடுகள் |
|---|---|---|
| 17.5% | 16.9% | 17.2% |

*அடிப்படை: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள்) இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்*

2018 ஆம் ஆண்டில் PAYE வரிக்கு மேல் திருத்தம் 8 மாதங்களுக்கு செயல்படுத்தப்பட்டபோது PAYE வருமானம் 25.7% அதிகரித்தது. பெயரளவு வளர்ச்சி தாக்கத்தை குறைத்த பிறகு 8 மாதங்களின் தாக்கம் 20% இலும் குறைவாக குறைவடைகின்றது. தற்போது பெயரளவிலான வளர்ச்சி தாக்கத்திற்கு மேலாகவும் அதற்கு அப்பாலும் வளர்ச்சி விகிதம் அண்ணளவாக 50% ஆகும். எனினும் வழங்கப்பட்ட நியதிகளின் அடிப்படையில் அது 10% இற்கு குறைவாக இருக்க வேண்டும். எனவே வழங்கப்பட்ட காரணத்திற்கும் மதிப்பிடப்பட்ட வளர்ச்சிக்கும் இடையே பாரிய வேறுபாடு உள்ளது.

இன்னொரு வகையான வருமானம் தொடர்ச்சியாக மேலதிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது என கடந்த கால மதிப்பீடுகள் காண்பிக்கின்றன. உண்மையான வருவாய் 5 ஆண்டுகளில் சராசரியாக மதிப்பீட்டிற்கு எதிராக 16.9% சதவிகிதம் குறைவாக உள்ளது.

2016 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (வருமானம் பெறுதல் ) மற்றும் வருடாந்த வருமானமாக ( 5 %) இனை பெறுபவர்கள் (ஒரு குடும்பத்தில் சம்பளத்தை சம்பாதிக்கும் பெரியவர்கள் ) PAYE வரியினை செலுத்த குறைந்தபட்சம் ரூபா 100,000 வருமானமாக பெற வேண்டும்.

**பரிந்துரை**

• அரசியலமைப்பு நிர்வகிப்பிற்கும் பொறுப்பிற்கும் உள்ள பொது நிதி நிர்வாகத்தில் தவறாக வழிநடத்தப்படுவதற்கு எதிராக பாராளுமன்றத்தின் முடிவுகளை பாதுகாப்பது முக்கியம். மதிப்பீட்டில் முக்கியமாக பொருத்தமற்று இருப்பது மேலே குறிப்பிட்டுள்ள படி முன்னுரிமைக்கு ஒரு விடயமாக வெளிக்கொணரப்பட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீடு மற்றும் நியாயத்தன்மை ஆகியவற்றின் முரண்பாட்டை நம்பத்தக்க விதத்தில் வெளிப்படுத்தக்கூடிய குழு மற்றும் பாராளுமன்றத்திற்கு புதிய தகவல்கள் வழங்கப்படாவிட்டால் இந்த முரண்ப்பாட்டை எதிர்கொள்ள இறுதி வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் கீழ்நோக்கி திருத்தப்பட வேண்டும்.

## 2. 2. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT)

ஏற்கனவே உள்ள கொள்கைகளுக்கு ஏற்ப 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வரிகளில் மதிப்பிடப்பட்ட 462 பில்லியனிலிருந்து 2019 ஆம் ஆண்டில் (VAT) வரி 14.6 % அதாவது 529 பில்லியனாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (VAT), வரி வருமானத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. கணக்கில் 25% இற்கு மேல் வரி வருமானமாக 2019 இல் காண்பிக்கும்.

*வரவு செலவுத் திட்ட உரையின்* தொழில்நுட்ப குறிப்புகள் (இணைப்பு ix பக்கம். 65) 2002 2 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் பயன்பாட்டிற்கு ஐந்து பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை வழங்குகின்றது. அவையாவன:

(1.) ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபை நிறுவனங்களின் சில ஆடைகளின் உள்நாட்டு விற்பனையில் துண்டு அடிப்படையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் வீதம் ரூபா 75 இலிருந்து ரூபா 100 ஆக திருத்தப்பட்டுள்ளது: (2). தெளிவான மற்றும் உறுதியான நோக்கத்திற்காக 'உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அரிசி பொருட்கள்' என்ற வார்த்தை மீண்டும் வரையறுக்கப்படும்; (3) 2019 ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்படும் தொடர்மாடி மனைகளிற்கு பெறுமதி சேர்க்கப்பட்ட வரி விதிக்கப்படும். 2019 ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் செயற்படுத்தப்பட மாட்டாது: (4) VAT வரிச் சட்டத்தில் சேர்க்கப்படும் புதிய விதிமுறைகள் குறிப்பிட்ட பொருட்கள் மீது VAT வரியினை விதிப்பது தொடர்பில் வருமானத்தை பாதுகாக்கும் நோக்கோடு அமைச்சர் பரிந்துரை செய்வதற்கு வழிவகுக்கும்: மற்றும் (5) VAT சட்டத்தின் நோக்கத்திற்காக மருந்தியல் உபகரணங்கள் மீள வரையறுக்கப்படும்.

*வரவு செலவுத் திட்ட விவாதம்*, இருப்பினும் மேலே குறிப்பிட்ட இந்த திருத்தங்களிற்கு அமைவாக வருடத்திற்கான வருமான அதிகரிப்பு ரூபா 500 மில்லியனாக மதிப்பிடப்படும் பட்சத்தில் வருமான தாக்கம் மதிப்பீடு செய்யப்படும். (வரவு செலவுத் திட்ட விவாதம்இ பக்கம் 49). இந்த மதிப்பீட்டினை விளக்க குழுவிற்கு எதுவித எடுகோள்களோ அல்லது நடைமுறைகளோ கிடைக்கப் பெறவில்லை.

[2] புதுப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் உள்ள விளக்கங்கள், "குறிப்பிட்ட திட்டங்களில் வழங்கப்பட்ட VAT விதிவிலக்குகளை ஊக்குவிப்பதை உள்ளடக்கியது" மேலும் அதிகரித்த VAT மதிப்பீட்டை விளக்கும் காரணியாகும்

ஆய்வுகள்

*<u>(PAYE) வரி மதிப்பீடுகள்</u>*

*இலங்கை ரூபாய் மில்லியன்கள்*

| வரி மாதிரி | வருமான மதிப்பீடுகள் | | 2018 இல் இருந்து அதிகரிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 தற்காலிக மதிப்பீடு | 2019 வரவு செலவுத்திட்ட மதிப்பீடு | 2018 இல் இருந்து மொத்த மாற்றம் | Y-o-Y % வருமான அதிகரிப்பு | பெயரளவு வளர்ச்சிக் கான காரணம் | கொள்கை மாற்றம் மற்றும் சிறந்த நிர்வாகத்திற் கான காரணம் |
| VAT | 461,651 | 529,000 | 67,349 | 14.6% | 36,932<br>(8.0%) | 30,417<br>(6.6%) |

மூலங்கள்: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள் ) ,இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்

முன்னர் குறிப்பிட்டது போன்று, அடுக்கு மாடி மனைகள் விற்பனையின் போது VAT இன் அறிமுக வருமான மதிப்பீட்டினை வழங்குவதில் வரவு செலவுத் திட்டம் தோல்வியுற்றது. ரூபா 37 பில்லியன் பெயரளவு வளர்ச்சியை கணக்கிட்டதன் பின்னர் VAT இலிருந்து ரூபா 30 பில்லியனை மேலதிக வருமான அதிகரிப்பாக வரவு செலவுத் திட்டம் மதிப்பிட்டது. கொள்கை மாற்றங்கள் மற்றும் வருவாயின் அடிப்படையில் வழங்கப்பட்ட தகவல் மற்றும் எடுகோள்களுடன் இந்த அதிகரிப்புப் பொருந்தவில்லை.

கடந்த கால அனுபவங்கள்  (2013-2017)

| அண்ணளவாக வருடாந்த வளர்ச்சி வீதம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடுகளிலிருந்து சராசரி பற்றாக்குறை | 2018 ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மேலதிக மதிப்பீடு எதிராக 2018 தற்காலிக மதிப்பீடுகள் |
|---|---|---|
| 18.4% | 7.7% | 16.1% |

அடிப்படை: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள்) , இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்

2016-2017 ஆம் ஆண்டின் போது ஏயுவு வரிச் சேகரிப்பானது 2016 ஆம் ஆண்டு மே 2 இல் 11% இலிருந்து 15% வரை கணிசமான திருத்தத்தின் மூலம் நன்மையடைந்தது. 2016 ஆம் ஆண்டில் 32..3% ஆகவும் 2017 இல் 56..5%  ஆகவும் வருடத்தின் வருட பெறுபேறாக பெயரளவிலான வளர்ச்சியை ஏயுவு பெற்றுக் கொண்டது. இருப்பினும், அந்த வருடங்களிற்கு அப்பால் 2011 தொடக்கம் 2018 வரையில் வரவு செலவுத்திட்டம் களில் VAT தொடர்ச்சியாக மேலதிகமாக மதிப்பிடப்பட்டது. மதிப்பீட்டிற்கு எதிராக 5 ஆண்டுகளில் சேகரிப்பில் சராசரியாக பற்றாக்குறை 7.7%ம  ஆக இருந்தது. 2018 இல்

VAT வருமானம் 4% வளர்ச்சியை மட்டுமே பெற்றது. இது GDP மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சியின் அரைவாசியாகும்.

**பரிந்துரை**

• பொது நிதி நிர்வாகத்திற்கான போதுமான மற்றும் நியாயமான தகவல்களுடன் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். வரவு செலவுத் திட்ட விவாத முடிவுக்கு முன்னர் VAT வருமானத்தில் வரவு செலவுத் திட்ட அதிகரிப்பிற்கான காரணம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

• நியாயமான தகவல் இல்லாததால், 2019 இல் VAT சேகரிப்பின் இறுதிப் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் நியாயமான மற்றும் நம்பகமானதாக இருக்கும் தொகைக்கு மேலதிக மதிப்பீட்டின் வரலாற்று ரீதியான போக்கு, குழுப் பரிந்துரைகள் போன்றவற்றை அவதானித்து விவேக அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

## 2. 3. தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT)

ஏற்கனவே உள்ள கொள்கைகளுக்கு ஏற்ப 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வரிகளில் மதிப்பிடப்பட்ட 71 பில்லியனிலிருந்து 2019 ஆம் ஆண்டில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது3 (NBT) 27.5% அதாவது 91 பில்லியனாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டு NBT 4.4 வரி வருமானமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது

வரவு செலவுத் திட்ட உரையின் தொழில்நுட்ப குறிப்புகள் (இணைப்பு ix பக்கம். 65) *2009 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிச் சட்டத்தின்* பயன்பாட்டிற்கு ஐந்து பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை வழங்குகின்றது. அவையாவன:

(1) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட விலையுயர்;ந்த கற்கள் சேவை வழங்குநர்களுக்கு பட்டைதீட்டப்படாத இரத்தினக்கற்களை இறுக்குமதி செய்து வெட்டிப் பட்டை தீட்டி மீண்டும் ஏற்றுமதி செய்வதற்காக விலக்களிக்கப்படும். (2) சிகரட்களை தயாரிப்பதற்காக வழங்கப்படும் விலக்களிப்பு நீக்கப்படும். (3) பிரதான கட்டிட ஒப்பந்தக்காரர் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீக்கப்படுவதனால் உட்கட்டுமான திட்டங்களுக்கான செலவுகள்

[3] NBT திருத்தங்கள் 2019 ஜூன் 1 முதல் அமல்படுத்தப்பட உள்ளன. கூடுதலாக, இந்த குழுவிற்கு MOF பின்வருமாறு கூறியுள்ளது: மேலும் வரி வருவாயை நீக்குவதற்கான முழு ஆதாயம் (உதாரணமாக. மது, 30 ஜூலை 2018 அன்று) ; குறிப்பிட்ட திட்டங்களுக்கு வழங்கப்பட்ட NBT விதிவிலக்குகளை ஊக்குவித்தல்; IRID இல் RAMIS கீழ் வரி நிர்வாகம் மற்றும் வரி தணிக்கை வலுப்படுத்தல். இவை ஒன்று கணக்கிடப்படவில்லை

குறைக்கப்படும் (4) இலத்திரனியல் நிதி பரிமாற்ற அட்டைகளைப் (டெபிற் மற்றும் கிரடிற் அட்டைகள்) பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு பொருட்கள் மற்றும் டிஜிற்றல் சேவைகள் அடங்கலான சேவைகளுக்காக செலுத்தப்படும் வெளிநாட்டு கொடுப்பனவுகளின் மீது (தற்போதுள்ள கடனட்டை பரிமாற்றங்கள் மீதான 2.5% முத்திரை கட்டணத்திற்கு பதிலாக )3.5% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறவிடப்படும். (5) வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொள்ளும் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் ,DMC முகவர்கள் மற்றும் ஹோட்டல் உரிமையாளர்கள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் வகையில் அது சரிசெய்யப்படும்.

ஆய்வுகள்

*(PAYE) வரி மதிப்பீடுகள்*

*இலங்கை ரூபாய் மில்லியன்கள்*

| வரி மாதிரி | வருமான மதிப்பீடுகள் | | 2018 இல் இருந்து அதிகரிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 தற்காலிக மதிப்பீடு | 2019 வரவு செலவுத்திட்ட மதிப்பீடு | 2018 இல் இருந்து மொத்த மாற்றம் | Y-o-Y % வருமான அதிகரிப்பு | பெயரளவு வளர்ச்சிக்கான காரணம் | கொள்கை மாற்றம் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கான காரணம் |
| NBT | 71.359 | 91 | 19,643 | 27.5% | 5,709<br>(8.0%) | 13,934<br>(19.5%) |

மூலங்கள்: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள் ) ,இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மாற்றங்களில் இருந்து ( வரவு செலவுத்திட்ட உரை, பக்கம் 49) கிடைக்கப்பெற்ற 5 பில்லியன் ரூபாவின் சாதகமான தாக்கம் தொடர்பாக வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வருமானத்தை அதிகரிக்கும் வழியாக மாத்திரம் குறிப்பிடப்பட்டதா அன்றேல் NBT விண்ணப்பம் தொடர்பாக இலாபாமானதும் நஷ்டமடையவதுமான இரண்டு விடயத்திலும் ஈட்டப்படும் இறுதித்தாக்கத்தை என்பது தொடர்பாக தெளிவற்றநிலை உள்ளது. இது (2) மற்றும் (4) ஆகிய வருமான அதிகரிப்பு நடவடிக்கைகளைப் மாத்திரமே உள்ளடக்கியுள்ளதாக பின்னர் நிதி அமைச்சு தெளிவுபடுத்தியது. இது முறையே 3.5 பில்லியன் மற்றும் 1.5பில்லியன் ரூபாய்கள் வருமான அதிகரிப்பிற்கு வித்;திடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடத்திலும் ஏற்படும் தாக்கத்திற்கமைவாக வருமான லாபங்கள் குறிப்பிடப்படுகின்றன. அந்தவகையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது ஆண்டின் நடுப்பகுதி முதலே நடைமுறைக்குவரும்.

இருந்த போதிலும் பெயரளவிலான வளர்ச்சியானது 5.7 பில்லியன்கள் என கணக்கிட்ட பின்னர் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து மேலும் 13.9 பில்லியன்கள் வருமான அதிகரிப்பு கிட்டும் என வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்

காண்பிக்கின்றன. கொள்கை மாற்றங்கள் மற்றும் வருமானத்தில் ஈட்டும் லாப நஷ்டங்கள் ஆகியவை தொடர்பில் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் அனுமானங்களுடன் இந்த அதிகரிப்பானது பொருந்தவில்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது.

கடந்த கால அனுபவங்கள் (2013-2017)

| அண்ணளவாக வருடாந்த வளர்ச்சி வீதம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடுகளிலிருந்து சராசரி பற்றாக்குறை | 2018 ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மேலதிக மதிப்பீடு எதிராக 2018 தற்காலிக மதிப்பீடுகள் |
|---|---|---|
| 12.3% | 26.3% | 18.0% |

*அடிப்படை: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள்) , இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்*

2019ம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் 27..5% வளர்ச்சிக்கு எதிராக நோக்குகையில் 2013 முதல் 2017 வரையான காலப்பகுதியில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியின் சராசரி வருடாந்த வளர்;ச்சியானது 12..3 % மாகக் காணப்பட்டது. கடந்த கால மதிப்பீடுகள் தொடர்பான ஆய்வுகள் இந்த வருமான பிரிவானது தொடர்ச்சியாக அளவிற்கு அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் காண்பிக்கின்றது. கடந்த 5 வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியை நோக்குகையில் சராசரி மதிப்பீடுகளுக்கு எதிரான உண்மையான வருமானமானது 26.3% அளவிற்கு வீழ்ச்சி கண்டுள்ளது. 2018ல் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விண்ணப்பங்களில் குறிப்பிடத்தகளவான விரிவாக்கம் காணப்பட்ட போதிலும் தே.க. வரியானது 18 % த்தினால் அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ( மது பானங்கள் மீதான விலக்களிப்பை நீக்குதல் போன்ற ). VAT மற்றும் PAYE வரிகள் விடயத்தில் காணப்பட்டது போன்றே தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வரிமான மதிப்பீடாது வரவு செலவுத்திட்ட நேரத்தில் பாராளுமன்றத்தில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிந்துரை

- வரவு செலவுத்திட்ட செயன்முறையின் கண்ணியத்தைக் காக்கும் வகையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் விண்ணப்பங்கள் விடயத்தில் அனுமானங்கப்படும் ஒவ்வொரு லாப மற்றும் நஷ்ட தாக்க மதிப்பீடுகளையும் வழங்குமாறு இந்தக் குழு நிதியமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கின்றது.
- வரலாற்று ரீதியாக மேலதீகமான மதிப்பீடுகளைக் காண்பிக்கும் போக்குகளைக் கருத்தில் ;கொண்டு லாபம் மற்றும் நஷ்டங்கள் தொடர்பான தவறிப்போன தகவல்கள் விடயத்தில் குழுவானது புத்தியின் அடிப்படையில்; 2019ற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி சேகரிப்பின் இறுதியான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை மேற்குறித்த ஆய்வுகளின் அடிப்படையில் நியாயப்படுத்தக் கூடியதும் நம்பக்கூடியதுமான அளவிற்கு மட்டுப்படுத்துமாறு பரிந்துரைக்கின்றது.

## 2.4 இறக்குமதி தீர்வைகள்

2018ம் ஆண்டில் சேகரிக்கப்பட்டதாக மதிப்பிடப்படும் 97 பில்லியன்கள் ரூபாவிலிருந்து 2019ம் ஆண்டில் இறக்குமதித் தீர்வை மீதான வரிகள் 44..3 % தால் அதாவது 140 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருந்த போதிலும் 2017ல் உயர்வாக 136.5 பில்லியன் ரூபா வரிகள் சேகரிக்கப்பட்டன. 2018ல் பிரயோகிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் அமுலாக்கம் மற்றும் இதர சலுகைகள் காரணமாக வருமானம் குறைவடைந்தமை தொடர்பாக நிதி முகாமைத்துவ அறிக்கை விளக்குகின்றது. 2019ல் இந்த வரிக் கூறானது வரி வருமானத்தின் 6.7 % த்தைக் கொண்டிருக்கும்.

ஆய்வுகள்

*(PAYE) வரி மதிப்பீடுகள்*

*இலங்கை ரூபாய் மில்லியன்கள்*

| வரி மாதிரி | வருமான மதிப்பீடுகள் | | 2018 இல் இருந்து அதிகரிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 தற்காலிக மதிப்பீடு | 2019 வரவு செலவுத்திட்ட மதிப்பீடு | 2018 இல் இருந்து மொத்த மாற்றம் | Y-o-Y % வருமான அதிகரிப்பு | பெயரளவு வளர்ச்சிக்கான காரணம் | கொள்கை மாற்றம் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கான காரணம் |
| இறக்குமதித் தீர்வை | 96,990 | 140,000 | 43,009 | 44.3% | 7,759 (8.0%) | 35,250 (36.3%) |

அடிப்படை: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள்) , இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்

இந்த அட்டவணையிலுள்ள ஆய்வுகள் பெயரளவிலான பெறுமதிகளின் வளர்ச்சியிலிருந்து மதிப்பீடுசெய்யப்பட்ட சுங்கத் தீர்வைகளின் வளர்ச்சி அதிகரிப்பானது 35% மேலாக இருக்கும் சுட்டிக்காட்டப்படுகின்றது. மதிப்பீடு செய்யப்பட்ட இறக்குமதி தீர்வைகள் 2019ல் 43,009 மில்லியன் ரூபாவாக (44.3%) அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 7750 மில்லியன் ரூபா இதில் சாதாரணமான வளர்ச்சிப் பிரிவுடன் தொடர்புபடுத்தி பார்க்கப்படும் அதேவேளை எஞ்சியுள்ள 32,250 மில்லியன் ரூபா அதிகரிப்பு கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களுடன் தொடர்புபடுத்தப்படு வேண்டியுள்ளது.

கடந்த கால அனுபவங்கள் (2013-2017)

| 5 ஆண்டுகளுக்கு மேலாக அண்ணளவாக வருடாந்த வளர்ச்சி வீதம் | ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீடுகளிலிருந்து சராசரி பற்றாக்குறை | 2018 ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மேலதிக மதிப்பீடு எதிராக 2018 தற்காலிக மதிப்பீடுகள் |
|---|---|---|
| 15.4% | 4.2% | 44.6% |

அடிப்படை: ஏற்றுக் கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் (பல ஆண்டுகள்) , இற்றைப்படுத்தப்பட்ட 2019 மதிப்பீடுகள்

சுங்கத் தீர்வைகள் அதிகரிப்பு தொடர்பான கொள்கை மாற்றங்கள் அதிமான தெளிவு இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்டது. (a) புகையிலை மற்றும் மதுபானம் அடங்கலாக தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான மேல்நோக்கிய சுங்கத்தீர்வை மீள்பார்வை (b) தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதி தொடர்பாக அலகு வீதத்திற்கு 10 மூ அதிகரிப்பு (c) பதப்படுத்தப்படாத எதனோல் மதுபானம் ஒவ்வொரு லீற்றருக்கும் 200 ரூபாவால் அதிகரித்து லீற்றரின் விலை 1000 ரூபாவாகவாகும். இது போன்ற பல மாற்றங்கள் குழப்பகரமானதாகவோ அன்றேல் வருமானத்தில் குறைவு ஏற்படுவதற்கு காரணமாகவோ அமையும். (d) இறக்குமதி செய்யப்பட்ட பழப் பானங்கள் தொடர்பான இறக்குமதி தீர்வை 2019 ஜுன் 1ம் திகதிக்குள் சரிசெய்யப்படும். (e) தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் மீதான இறக்குமதி தீர்வைகள் மாற்றியமைக்கப்படும். (f) இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் இறக்குமதி தொடர்பான இறக்குமதித் தீர்வை குறைக்கப்படும். (g) Go-Karts மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்படும் Go-Karts தொடர்பான சுங்கத் தீர்வை மற்றும் செஸ் வரிகள் நீக்கப்படும்.

சுங்க இறக்குமதித் தீர்வையை அதிகரிப்பது தொடர்பான கொள்கை மாற்றங்கள் வரவு செலவுத்திட்டத்தின் யோசனைத் திட்டங்களின் கீழ் போதிய தெளிவற்ற வகையில் சமர்பிக்கப்பட்டுள்ளன. சுங்கத் தீர்வை தொடர்பான வருமானம் ஈட்டும் யோசனைகளின் அடிப்படையில் வருமானமானது 20, 000 ரூபா வரையில் அதிகரிக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இருந்த போதிலும் விளக்கம் அளிக்கப்பட வேண்டியது 35,250 மில்லியன்களாகும். மேலும் வருமானத்தைக் குறைக்கும் கொள்கை மாற்றங்கள் .இருப்பின் கீழ் நோக்கிய சரி செய்தலை மேற்கொள்ள வேண்டும். பின்னர் விளக்க இடைவெளி மேலும் விரிவடையும்.

**பரிந்துரை**

- யோசனைகள் ((d), (e), (f) தொடர்பாக தெளிவை வழங்க வேண்டு:ம்.. இது தற்போது தெளிவற்றதாக காணப்படுகின்றோம்.
- சாத்தியமான வெளிப்பாடுகளுடன் பொருந்தக் கூடியதாக நியாயப்படுத்தக் கூடிய எதிர்வுகூறலை அல்லது கீழ் நோக்கியதாக எதிர்கூறலை மாற்றியமைக்கக் கூடியவாறு பாராளுமன்றத்திற்கு தகவல்களை வழங்கல்

*2.5* **நிறுவன வரி**

2018 கீழ் தொடர்ந்த கொள்கைக்கு ஏற்ப மதிப்பிடப்பட்ட 159 பில்லியன் ரூபா வரிகள் மூலம் அறவிடப்பட்டிருந்தது. 2019ல் 183 பில்லியன் ரூபாவிற்கு 15% நிறுவன வரிகள்4 எதிர்ப்பார்க்கப்பட்டது. இவ்வரி அறவீடு 8.8% வருமான வரி கணக்கிலிடப்படுப்படுகின்றது.

ஆய்வுகள்

*(PAYE) வரி மதிப்பீடுகள்*

*இலங்கை ரூபாய் மில்லியன்கள்*

| வரி முறைகள் | வருவாய் மதிப்பீடுகள் | | 2018 முதல் அதிகரிப்பு | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2018 தற்காலிக மதிப்பீடு | 2019 – வரவு செலவு மதிப்பீடு | 2018 லிருந்து மொத்த மாற்றம் | Y-o-Y % வருவாய் அதிகரிப்பு | அதிகாரபூர் வமாக நிர்ணயிக்க ப்பட்ட வளர்ச்சி | கொள்கை மாற்றங்கள் மற்றும் சிறந்த நிர்வாகத்தி னால் ஏற்பட்ட வளர்ச்சி |
| நிறுவன வரி | 159,133 | 183,000 | 23,867 | 15.0% | 12,731<br>(8.0%) | 11,136<br>(7.0%) |

மூலங்கள்;: அங்கிகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகள் (பல வருடங்கள்), தரவேற்றப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகள் 2019

2019 மார்ச் 6 ஆம் திகதி இக்குழுவுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு ஏற்ப நிறுவன வரி அறவீடுகள் மூலம் கொள்கை மாற்றங்கள் எதிர்ப்பார்க்கப்பட்டன. அவை: (a) பெறுமதி மாற்றங்கள் மற்றும் பணம் அனுப்புவதற்கான வரிகளில் உட்படுத்திய IRD சட்ட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் முழுமையான வருவாய் நன்மைகள் ;

(b) RAMIS இன் கீழான வரி மதிப்பீடு உள்ளடங்கலான வரி நிர்வாகத்தைப் பலப்படுத்துதல்

4 நிறுவன வரிக்கு மூன்று கூறுகள் உள்ளன: மொத்த வருமான வரி: வருமான வரி, டிவிடென்ட் வரி மற்றும் பணம் செலுத்துதல் வரி

கடந்தகால அனுபவங்கள் (2013-2017)

| 5 வருடத்திற்கு மேற்பட்ட வருடாந்த சராசரி வளர்ச்சி வீதம் | அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீட்டிலிருந்து ஏற்படும் சராசரி குறைபாடு | 2018இல் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளுக்கு எதிராக 2018 தற்காலிக மதிப்பீடுகள் |
|---|---|---|
| 14.3% | 6.4% | 18.4% |

மூலங்கள்;: அங்கிகரிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகள் (பல வருடங்கள்), தரவேற்றப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகள் 2019

கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கேற்ப நிறுவன வரி எப்பொழுதும் அதிகமாகவே காட்டப்பட்டு வந்துள்ளதை சுட்டிக்காட்டுகின்றதுடன் சராசரியாக 6.4 சதவிகிதம் குறைவாக மதிப்பிடப்படுகின்றது. 2018 ல் அதீத மதிப்பீடு 18.4 சதவீத உயர்வை எட்டியிருந்தது. கடந்த வருட வருடந்த சராசாரி 14.3 வீத வளர்ச்சி 2019 ஆம் ஆண்டிலும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் 2018 ஏப்ரல் மாதம் புதிதாய் அமுல்படுத்தப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தினால் 19.8 சதவீத சராசாரி வளர்ச்சியை கண்டிருந்தது. மேலும், கடந்த சராசாரி வீதங்களை விட 2 சதவிகித நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி 2019 ல் எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆகையினால் கொள்கை ரீதியாக முன்னெடுக்கப்பட்ட 7 சதவிகித வளர்ச்சி பல தகவல் நியாயப்படுத்தல் குறைபாடுகளால் முன்னனெடுக்கப்பட்டிருந்தது.

**பரிந்துரைகள்**

- நிறுவன வரியை எதிர்வுகூறும் மோசமான கடந்த காலத்துடன், கடந்த காலத்தில் COPFஇன் தொடர்ச்சியான மேற்பார்வை வினவல்கள் இருந்தபோதிலும், அவை உறுதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் தீர்க்கப்படவில்லைஎன்பது, இந்தக் குழுவுக்கு பொருத்தமான சில தக்கனவற்றை எடுப்பதற்கான பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்க ஏதுவாகிறது : பிரத்தியேகமான பல்வேறு பகுப்பாய்வுகள் பெறப்பட்டு, வழங்கப்பட்ட வார்த்தைகள் மூலமான காரணங்களுக்கு பொருத்தமான மதிப்பீடுகளுக்கு செல்லுபடியாகும் காலத்தினை கூர்ந்தாய்வு செய்து, இந்தப் பொருத்தமான தொடர்ச்சியான பகுப்பாய்வுகளை குழுவுக்கும் ஏதாவது மறுசீரமைக்கப்பட்ட மதிப்பீட்டை நாடாளுமன்றத்துக்கும் வழங்குதல்.

### பிரிவு III: தகவல்களின் தராதரங்கள் மற்றும் உரிய விடாமுயற்சி

இந்த அறிக்கையின் II ம் பகுதியானது COPF குழுவின் கரிசனைகளை முன்னிலைப்படுத்திக் காண்பித்துள்ளது. பாதீட்டில் போதியளவு தகவல்கள் தரப்படாமை மற்றும் அறியத்தரப்பட்ட தகவல்களின் போதிய நம்பகத்தைதன்மையோ நேர்மையோ இன்மை தொடர்பாக காண்பித்துள்ளது.

தற்போதைய பகுதியானது மேலுமொரு கரிசனை தொடர்பாகவும் சுட்டிக்காட்டியுள்ளது: வழங்கப்படும் தகவல்கள் தொடர்பாக பொருத்தமான தரநிலைகளோ அன்றேல் உரிய சிரத்தையோ காண்பிக்கப்படாமை. இது இரண்டு வகையான விடயங்களை முன்னிலைப்படுத்துவதனூடாக காண்பிக்கப்பட்டுள்ளது. (1) வகைப்படுத்தல் / வடிவங்களில் சமரசமற்ற வேறுபாடுகள் (2) பேரினப்

**பொருளாதார அனுமானங்களில் வேறுபாடுகள் / மாற்றங்கள்**

தகவல் தராதரம் மற்றும் உரிய சிரத்தை: வழங்கப்பட்ட தரவுகள் தொடர்பான உள் நிலைத்தன்மை மதிப்பீடுகளை தயாரிக்கின்றமை தொடர்பான தொழில்சார்ந்த மனப்பான்மை மற்றும் துல்லியத்தன்மை குறித்து கடுமையான கரிசனைகள் காணப்படுவதைக் குறிக்கும்.

### (1) வகைப்படுத்தல் /வடிவங்களில் சமரசமற்ற வேறுபாடுகள்

வரவு செலவுத்திட்ட தகவல்கள் பல்வேறு வகையான வகைப்படுத்தல்கள் மற்றும் வடிவங்களில் வழங்கப்படுகின்றன. இருந்த போதிலும் வேறுபட்ட வடிவங்களில் வழங்கப்படும் தகவல்களுடன் சமரசம் செய்து கொள்வதற்கான வழிவகைகளை பாராளுமன்றம் வழங்கவில்லை. வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் என்றவகையிலும் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் என்ற வகையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ள பெருந்தொகையான தகவல்கள் தொடர்பாக சமரசம் செய்துகொள்ள முடியாத வேறுபாடுகளை இது இறுதியில் உருவாக்குகின்றது. இது தகவல்களைத் தெரிந்துகொண்டு முடிவெடுப்பதற்கு பாராளுமன்றத்திற்கு போதுமான தகவல்களை வழங்காமை தொடர்பாக பொருத்தமான தராதரமோ உரிய சிரத்தையோ காண்பிக்கப்படாமையைப் பிரதிபலிக்கின்றது. கடந்த ஆண்டுகளில் COPF குழு இந்தப்பிரச்சனையை நிதியமைச்சிடம் முன்னிலைப்படுத்திக் காண்பித்துள்ளது. இருந்தபோதிலும் தகவல்கள் வழங்கப்படுகின்றமை தொடர்பாக முறையான முன்னேற்றத்தைக் கண்டடைவதற்காக எந்தவொரு முயற்சியும் இதுவரை எடுக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

### 1.1. வகைப்படுத்தல்களில் வேறுபாடுகள்

'கணக்கு வகைப்பாடு' என அழைக்கப்படுவதிலிருந்து வழங்கப்பட்ட மூன்று தொகுதிகள் கொண்ட வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் உள்ளன. இறுதியான யோசனைகள் மற்றும் சேர்க்கப்பட்ட மொத்த மதிப்பீடுகள் உடனான வரவு செலவுத்திட்ட உரை 'பொருளாதார வகைப்படுத்தலில்' வழங்கப்படுகின்றது.

இந்த விடயத்தை பரந்த அளவில் புரிந்துகொள்ளக்கூடியவாறு விளக்குவதெனில் செலவீனம் என்பதை ஒருசாரார் அது எந்த மூலத்தில் இருந்து உருவாகின்றது என்பதில் இருந்து இனங்காண முடியும். அதேவேளை ஏனையோர் பொருளாதார

வெளிப்பாடுகள் யாருக்கெல்லாம் நன்மைகளைக் கொடுக்கின்றதோ அவர்களை அடையாளம் காண்பதன் மூலமாக விளங்கிக்கொள்ள முடியும்.

உதாரணமாக வரவுசெலவுத்திட்ட உரையில் மாகாண சபை சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் என்பன 'சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள்' என குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வரைபு வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டில் 'இடமாற்றங்கள்;' என சுட்டிக்காட்டப்பட்டு;ள்ளது. ஆவணங்களுக்கும் நியாயமற்ற கடினமான பணிக்கும் இடையே உள்ள ஒப்பீட்டுத்தன்மை இவ்வாறான விடயங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்தவகையில் இரண்டு வெவ்வேறு வடிவங்களில் இலக்கங்கள் அறிக்கையிடப்படும் போது நிதி அமைச்சு தேவையான மேலதிக தகவல்களை வழங்கினாலேயொழிய பாராளுமன்ற உறுப்பினர்களால் அதனோடு சமரசம் செய்துகொள்வதற்கு எந்த வழிவகைகளு;ம் கிடையாது.

**பரிந்துரை**

- இரண்டு வடிவங்களில் வழங்கப்பட்டிருக்கும் வரவுசெலவுத்திட்டம் பற்றிய தகவல் தொடர்பான பிரச்சனைக்கு முறையான தீர்வை வழங்க அடுத்த வரவுசெலவுத்திட்டத்திற்கு மூன்று மாதங்கள் முன்னமே ஊழுPகு குழு ஊடாக பாராளுமன்றத்pற்கு நிதி அமைச்சு அறிக்கையிடவேண்டும். ஒப்பிட முடியாத தகவல்கள் பாராளுமன்றம் வரவுசெலவுத்திட்ட விவாதங்களை நடத்தும் ஆற்றலையும் பொது நிதி முகாமைத்துவ செயற்பாடுகளை போதுமான தகவலறிந்த முறையில் செயற்படுவதையும் மலினப்படுத்துகின்றது.
- பெருந்தொகையான தகவல்களைக் கொண்டிருப்பதனால் மட்டும் பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட பணிகள் சிறப்புப் பெறுவதில்லை மாறாக மேலும் தெளிவானவகையில் தகவல்கள் ஒழுங்கமைக்கப்பட்டு அறிக்கையிடப்படுவதனாலும் சிறப்புப்பெறுகின்றது. அந்தவகையில் நிதி அமைச்சு அதன் தற்போதைய அறிக்கையிடல் முறைமையானது போதுமானதா என்பதை தெளிவான நேர்மையுடைய தகவல்களை வழங்குவதன் மூலமும் அதனை மேம்படுத்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்

## 1.2 . வேறுபாடுகளைச் சரிசெய்வதற்கு போதிய தகவல் இன்மை

வழங்கப்பட்ட இலக்கங்களில் காணப்படும் வேறுபாடுகளுக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்கையில் குழு பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. அறிக்கையிடும் வடிவங்களில் காணப்படும் வேறுபாடுகள் காரணமாக பிரச்சனைகள் உருவாகின்ற போதிலும் இதனை வேறுபாடுகள் தொடர்பில் விளக்கத்துடன்கூடிய தகவல்களை வழங்குவதற்கான அர்ப்பணிப்பின் மூலமாக களையமுடியும். இது தற்போதை அறிக்கையிடல் வடிவத்தின் மத்தியிலும் மேம்பட்ட வியாக்கியானத்திற்கும் புரிந்துணர்விற்கும் வழிகோலும். பின்வரும் அட்டவணை வரவுசெலவுத்திட்ட உரையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காண்பிக்கின்றது. வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளில் விளக்கத்துடன் கூடிய தகவல்கள் வழங்கப்படவில்லை.

வருமான மதிப்பீடுகளை வகைப்படுத்தல் 2019 வரவுசெலவுத்திட்டம்

இலங்கை ரூபாய் மில்லியன்கள்

| வரவுசெலவுத்திட்ட உரை | | புதுப்பிக்கப்பட்ட வரவுசெலவு மதிப்பீடுகள் | | ஒப்பீட்டுத்தன்மை |
|---|---|---|---|---|
| வருவாய் கூறு | பெறுமதி | வருவாய் கூறு | பெறுமதி | |
| மொத்த வருமானம் மற்றும் மானியங்கள் | 2,464 | மொத்த வருமானம் மற்றும் மானியங்கள் | 2,506 | சமரசம் செய்ய முடியாது (+42) |
| வரி வருமானம் | 2,077 | வரி வருமானம் | 2,077 | சமரசம் செய்ய முடியும் |
| வெளி வர்த்தகத்தில் o/w வரிகள் | 399 | சர்வதேச வர்த்தகத்தில் o/w வரிகள் | 401 | சமரசம் செய்ய முடியாது (+2) |
| பொருட்கள் மற்றும் சேவைகளில் o/w வரிகள் | 1,293 | உள்நாட்டு பொருட்கள் & சேவைகளில் o/w வரிகள் | 1,243 | சமரசம் செய்ய முடியாது (- 2) |
| | | o/w அனுமதிப்பத்திர வரிகள் & மற்றவை | 48 | |
| o/w வருமான வரி | 385 | வருவாய் & லாபங்களில் o/w வரிகள் | 385 | சமரசம் செய்ய முடியும் |
| வரி இல்லாத வருமானம் | 267 | வரி இல்லாத வருமானம் | 312 | (+45) சமரசம் செய்ய முடியாது |
| மாகாணசபை வரிப் பங்கீடு மற்றும் வருமானப் பகிர்வு | 107 | மாகாணசபை வரிப் பங்கீடு | 107 | சமரசம் செய்ய முடியும் |
| மானியங்கள் | 13 | வெளிநாட்டு மானியங்கள். | 10,000 | சமரசம் செய்ய முடியாது (-3) |

மூலம் : இற்றைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2019 ; வரவு செலவுத்திட்ட உரை 2019.

செலவின மதிப்பெடுகளின் வகைப்படுத்தல், 2019 வரவு செலவுத்திட்டம்

பெறுமதிகள் இலங்கை ரூபாய் பில்லியனில்

| வரவுசெலவுத்திட்ட உரை | | புதுப்பிக்கப்பட்ட வரவுசெலவு மதிப்பீடுகள் | | ஒப்பீட்டுத்தன்மை |
|---|---|---|---|---|
| செலவீனக் கூறு | பெறுமதி | செலவீனக் கூறு | பெறுமதி | |
| மொத்த செலவீனம் | 3,149 | மொத்த செலவீனம் | 3,341 | சமரசம் செய்ய முடியாது (+192) |
| மீண்டெழும் செலவீனம் | 2,415 | மீண்டெழும் செலவீனம் | 2,413 | சமரசம் செய்ய முடியாது (-2) |
| o/w சம்பளம் & கொடுப்பனவுகள் | 778 | o/w தனிநபர் ஊதியங்கள் | 541 | சமரசம் செய்ய முடியாது (-237) |
| o/w பொருட்கள் & சேவைகள் | 178 | o/w பொருட்கள் & சேவைகள் * | 255 | சமரசம் செய்ய முடியாது (-77) |
| o/w வட்டி | 913 | o/w வட்டி கொடுப்பனவுகள் | 900 | சமரசம் செய்ய முடியாது (-13) |
| o/w இடமாற்றங்கள் | 546 | o/w இடமாற்றங்கள் | 717 | சமரசம் செய்ய முடியாது (+171) |
| - மூலதனம் | 756 | - மூலதனம் செலவீனம் | 928 | சமரசம் செய்ய முடியாது (+172) |

* பொருட்கள் & சேவைகள் செலவினமானது தனிநபர் ஊதியங்கள், உதவுத்தொகை & இடமாற்றங்கள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளைத் தவிர மீளவரும் செலவினமாகக் கருதப்படுகிறது.

*மூலம் : இற்றைப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 2019 ; வரவு செலவுத்திட்ட உரை 2019.*

பரிந்துரை

*பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரை மற்றும் வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு இடையிலுள்ள வித்தியாசங்கள்

தொடர்பாக நிதி அமைச்சு பாராளுமன்றத்திற்கு முழுமையான சமரசம் /விளக்கத்தை வழங்கவேண்டும். இது மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து முரண்பாடுகளையும் அத்தோடு இருக்கக்கூடிய ஏனையவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

1. **பேரினப் பொருளாதார எதிர்வுகூறலில் வேறுபாடுகள்**

இடைக்கால பேரினப் நிதிக் கட்டமைப்பு வரவுசெலவுத்தி;ட்ட மதிப்பீடுகளுக்கான முக்கியமான அடிப்படையாக இருக்கின்றது.. நியாயமான காரணத்தை தருவதற்கு எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படாமை, மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் /வித்தியாசங்கள் தொடர்பாக போதுமானவகையில் பாராளுமன்றத்திற்கு அறியத்தர நடவடிக்கை எடுக்கப்படாமை, பயன்படுத்தப்பட்ட அன்றேல் பிரசுரிக்கப்பட்ட பேரினப் பொருளாதார அனுமானங்களில் வேறுபாடுகள் மாற்றங்கள் இருப்பதை குழு இனங்கண்டுள்ளது. இந்த சிக்கலான வேறுபாடுகள்/ மாற்றங்கள் பின்வரும் அட்டவணையில் சுட்டிக்கட்டப்பட்டுள்ளது

வேறுபட்ட மூல ஆவணங்களில் பாரிய பொருளாதார அனுமானங்கள்

| | 2019 நிதி முகாமைத்துவ அறிக்கை | 2019 வரைபு வரவு செலவுத்திட்ட மதிப்பீடு | 2019 வரவு செலவுத்திட் ட உரை | வரவு செலவுத்திட்ட உரையின் பின்னர் MOF COPFக்கு வழங்கிய தகவல் |
|---|---|---|---|---|
| உண்மையான GDP வளர்ச்சி வீதம் | 3.5-4.5% | 3.5-4.5% | 3.5% | 4% |
| பரிமாற்ற வீதம் | N/A | N/A | N/A | 182 |
| ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்ட மீதி (GDPயின் %) | 4.8% | N/A | 4.4% | 4.4% |
| வரவு செலவுத்திட்ட ஆரம்ப மீதி (GDPயின் %) | 0.9% | N/A | 1.5% | 1.5% |
| அரசாங்கக் கடன் - GDPவிகிதம் | 83.6% | N/A | 83.0% | N/A |

மூலங்கள் பட்டியல் படி .

அனுமானங்கள் கட்டமைப்பு தொடர்பாக பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்படுகின்றன.

- உண்மையான மொத்த தேசிய உற்பத்தி வீதம் தொடர்பான அனுமானங்கள் பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களுக்கும் பிரசுரிக்கப்படாததற்கும் இடையே வேறுபடுகின்றது. பிரசுரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரையில் இது 2019ல் 3.5% வீதம் என இருக்க அதேவாரத்தில் நிதி அமைச்சின் பிரசுரிக்கப்படாத ஆவணங்களில் 4% என குறிப்பிடப்பட்டுள்ளது.( மேலுள்ள அட்டவணையைப் பார்க்கவும் )

- வரவு செலவுத்திட்டத்திற்காக சமர்பிக்கப்பட்ட அனைத்து மதிப்பீடுகளிலும் மிகப்பெரிய அளவிலான அனுமானக் கட்டமைப்பு இருக்கின்ற காரணத்தினால் அனுமானக் கட்டமைப்புக்கள் தொடர்பாக ஆணைபெற்ற COPF குழு தெரிவுசெய்யப்பப்ட்ட அடிப்படைக் காரணம் மற்றும் மூலங்களைத்தருமாறு நிதியமைச்சிடம் வேண்டுகோள் விடுகின்றது. இலங்கை மத்திய வங்கி போன்ற மூன்றாவது தரப்பின் மதிப்பீட்டிலேயே நிதியமைச்சு தங்கியுள்ளது. இருந்தபோதிலும் அனுமானக் கட்டமைப்பிற்கான எழுத்துமூல மூலங்களையோ அன்றேல்/ காரணிகளையோ உறுதிப்படுத்த முடியவில்லை. தகவலுக்காக வழங்கப்பட்ட மாதிரி உரு வெறுங்கையோடு திரும்பியது. இது தொழில்சார் தன்மை மற்றும் உரிய சிரத்தை ஆகியன தொடர்பில் கரிசனையை ஏற்படுத்துகின்றது. இது அனைத்து வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளிலும் அனுமானக் கட்டமைபபு உள்ளதனைக் கோடிட்டுக்காட்டுகின்றது.

- பேரினப் பொருளாதாரத்தின் முக்கிய சுட்டிகளின் எதிர்கால அனுமானங்களுக்கான அடிப்படை தெளிவற்றதாக காணப்படுகின்றது. சுட்டிகள் தொடர்பாக எதிர்வுகூறல்களை மேற்கொள்ள வேண்டாம் என நிதி அமைச்சு குறிப்பிடும் அதேவேளை அவர்கள் இடைக்கால பேரின நிதிக் கட்டமைப்பிற்கு தெரிவுசெய்யப்பட்ட மூலங்கள் தொடர்பாக எழுதுவதற்கோ அன்றேல் மூலங்களுக்கான நியாயப்பாட்டை வழங்கவோ தவறியுள்ளனர். வரவுசெலவுத்திட்டத்தின் வரலாற்று ரீதியான ஆய்வுகள் அடிப்படையில் இடைக்கால அனுமானக் கட்டமைப்புக்களானது நிர்ணயிக்கப்பட்ட இலக்கினைவிடவும் கணிசமானளவிற்கு வெளியே உள்ளதுடன் பொதுவாக எதிர்காலத்திற்கு மிகவும் சாதகமான கண்ணோட்டத்தை நோக்கியதான திசையில் உள்ளது. இது தற்போதைய வரவுசெலவுத்திட்ட தீர்மானங்கள் பற்றிய விளைவுகள் தொடர்பாக பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தும் தாக்கத்தைக் கொண்டிருக்கின்றது.

**பரிந்துரை**

- அனுமான கட்டமைப்பு தொடர்பான மூலங்களை தொடர்பாக மேலதீக தகவல்களை வழங்கக்கூடிய நிலையில் நிதி அமைச்சு இல்லாமலுள்ளது. வரவுசெலவு மதிப்பீட்டின் அனைத்து பகுதிகளையும் உள்வாங்கும் அனுமானக் கட்டமைப்பு உரிய சிரத்தை மற்றும் பொறுப்புக்களின்றி மிகவும் சர்வசாதாரணமாக தெரிவுசெய்யப்படுமிடத்து அது பொது நிதி முகாமைத்துவத்திற்கு ஆபத்தாகும். நிதி அமைச்சு அதன் அனுமானக் கட்டமைப்பு குறி;த்து நியாயப்படுத்த முடியாத நிலையில்

உள்ளதால்தற்போது பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள அனுமானக் கட்டமைப்பின் போதுமானதன்மை மற்றும் செல்லுபடி நிலை தொடர்பாக மதிப்பீடு செய்து பாராளுமன்றத்திற்கு உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியானது முறையாக அழைக்கப்படவேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது.

# <u>இணைப்புகள்</u>

**இணைப்பு 1: அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு(ஊழீகு) நிதியமைச்சினால் வழங்கப்பட்ட ஆவணம்.**

| திகதி | ஆவணத் தலைப்பு |
|---|---|
| 22.02.2019 | *சார்ந்த* பொறுப்புகள் |
| | வாகனத் தரவுத்தளம் |
| 26.02.2019 | எரிபொருள் விலையிடல் சூத்திரம் |
| 27.02.2019 | கடன் தொகையை திரும்பச் செலுத்துதல் அட்டவணை |
| | *சார்ந்த* பொறுப்புகள் |
| 06.03.2019 | தேசி*யளவு* - பொருளாதார எடுகோள் |
| | புதுப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட வருவாய் மதிப்பீடுகள் |
| | புதுப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் செலவினம் |
| | *அரசின் வருமானம் தொடர்புடைய* விதிகள் பற்றிய தகவல் |
| | அரசாங்கத்தின் தீர்மானங்கள் |
| 08.03.2019 | நிதி அமைச்சினால் *எதிர் பார்க்கப்பட்ட மற்றும்* உண்மையான வருவாய் |
| | மாதாந்த கடன் *மீள்* செலுத்தும் *இயலுமையின்* (வட்டி) முன்அறிவிப்பு -2019 நிதி அமைச்சிடமிருந்து |
| 11.03.2019 | புதிய வருவாய் திட்டங்கள் |
| | வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க உண்மையான வருவாய் |
| | பந்தயம் மற்றும் போட்டிகளுக்கான *அடிப்படையும்* *வருவாயின் விளைவுகளும்* |
| | மதுபானம் கலால் வரி மீதான அடிப்படை மற்றும் வருவாய் விளைவுகள் |
| | சிகரெட்டுகள் மீதான அடிப்படை ஆதாரம் மற்றும் வருவாய் விளைவுகள் |
| | சிகரெட் மீதான முன்கூட்டிய வரி வருவாய் ஒதுக்க மசோதா |
| | சிகரெட் தீதான வரி இயக்க பொறிமுறை (மெக்கனிசம்) |
| | மகப்பேற்று விடுமுறை நன்மைகள் தொடர்பான கணிப்பீடு |
| | இனிப்பு பானங்களில் உள்ள சுவையின் அளவு தொடர்பான வரி உள்ளடக்கிய சுகாதார அமைச்சின் கடிதம் |
| | இனிப்பு பானங்களில் உள்ள சுவையின் அளவு தொடர்பான சுகாதார அமைச்சின் தொடர்ச்சியான கருத்துரை |

## இணைப்பு 1: அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு(ஊழுீகு) நிதி அமைச்சகத்தால் வழங்கப்பட்ட புதுப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்

| | | 2017 உண்மையான அளவு | 2018 தற்காலிக | 2019 வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வரிசையாக | வருவாய் மதிப்பிடுவதன் அடிப்படை ஊகங்கள் |
|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் *(வரி - அல்லாத - வரி௸ மாகாண சபை வருவாய்)* | | | | |
| | வரி வருவாய் | 1,670,178,219 | 1,712,317,538 | 2,077,000,000 | வரியின் மிதக்கும் தன்மையானது கடந்த கால தரவுகள், பேரளவு பொருளாதார திட்டமிடல் காரணிகள் (பொருளாதார வளர்ச்சி, பணவீக்கம், வேலையின்மை, நாணயமாற்று வீதம், வர்த்தக உரிமையாளர் கொள்கை போன்றன அவற்றில் சிலவாகும்.) மட்டுமன்றி பொது வரிப்பணம் சம்பந்தமான நிபந்தனைகள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம், வருமான மதிப்பீட்டு நடத்தைகள் தொடர்பான வருமான கணக்கீட்டு ஆய்வாளர்களால் வருமானத்துறை சட்டத்தொகுப்பை மையமாகக் கொண்டு 2019ஆம் ஆண்டுக்கென உருவாக்கப்பட்ட வருமான மதிப்பீடுகள். |
| 1 | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 371,336,120 | 341,710,101 | 400,640,000 | • புகையிலை மற்றும் மதுபானம் உள்ளிட்ட தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான சுங்க வரியை அதிகரிக்க நடவடிக்கை<br>• தெரிவு செய்யப்பட்ட உயர் தொழிநுட்பம் மற்றும் மாணிக்ககல் பட்டைத்தீட்டுதல் மற்றும் தங்காபரண தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களுக்கான 525இன் கீழ் ீயுடு நிவாரணம் வழங்கப்படும்<br>• கோ கார்ட்ஸ்(புழ-முயசவள) மற்றும் அந்த கார்ட்ஸ்(முயசவள) வண்டிகளுக்கு பயன்படுத்துப்படும் டயர்களுக்குஊஐனு மற்றும் செஸ் வரி நீக்குல்<br>• தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான செஸ் வரி கட்டம் கட்டமாக நீக்கப்படும்.<br>• தேசிய உற்பத்தியை பாதுகாப்பதற்காக |
| 1.1. | இறக்குமதிப் பொறுப்புக்கள் | 136,501,263 | 96,990,576 | 140,000,000 | |
| 1.2. | ஏற்றுமதிப் பொறுப்புக்கள் | 30,211 | 39,688 | 40,000 | |
| 1.3. | இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான உரிமக் கட்டணம் | 1,487,762 | 1,554,482 | 1,600,000 | |
| 1.4. | “செஸ்” வரி அறவீடு | 59,554,404 | 53,368,978 | 54,000,000 | |
| 1.5. | துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி | 102,360,159 | 113,949,870 | 115,000,000 | |
| 1.6. | விசேட பொருட்களுக்கான வரி | 71,402,321 | 75,806,508 | 90,000,000 | |
| 1.7. | ஏனையவை | - | - | - | |

| | | 2017 உண்மையான அளவு | 2018 தற்காலிக | 2019 வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வரிசையாக | வருவாய் மதிப்பிடுவதன் அடிப்படை ஊகங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | வழங்கக்கூடியஎளுஊடுமுறைய மாற்றல்<br>• **எரிபொருள்** சூத்திரம் மற்றும் தீர்வை வரிக் குறைப்புக்களால் ஏற்படும் எதிர்வினை அச்சுறுத்தல்கள்<br>• பயணிகளின் போக்குவரத்தை வலுப்படுத்தும் வகையில் பெற்றோல் மற்றும் டீசல் நுகர்வை அதிகரித்தல் மற்றும் எரிபொருள் குதங்களை முற்றாக செயற்படுத்துதல்.<br>• இறப்பர் மற்றும் தென்னை ஏற்றுமதியில் காணப்படும் மந்த வளர்ச்சி<br>• 2019ஆம் ஆண்டு சாதாரண மழைவீழ்ச்சியிலும் குறைந்த மழைவீழ்ச்சி கிடைக்கப்பெறும் என்ற வானிலை முன்னறிவிப்பு காரணமாக, உலர் வலய பகுதிகளின் வறட்சி நிலைமை எதிர்பார்க்கப்படுகிறது. |
| 2 | உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் சேவகள் மீதான வரி | 1,016,296,433 | 1,046,819,356 | 1,243,245,000 | • |
| 2.1. | பெறுமதி சேர்க்கப்பட்ட(ஏயுவு) | 443,739,475 | 461,650,625 | 529,000,000 | • 2019ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வரிவிலக்களித்தல்.<br>• முதலீட்டுச் சபையினால் அனுமதி அளிக்கப்பட்ட வர்த்தகத்தினால் உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கப்படும் துணி வகைகளுக்காக வெட் வரி சீர்திருத்தப்படும்.<br>• 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மின்சார பொருட்கள், இயந்திர சாதனங்கள், கமரா, விமானம் மற்றும் உதிரிப்பாகங்கள், மரத் தளபாடங்களுக்கான வெட் வரி நீக்கப்பட்டு முழுமையான நன்மைகள் கிடைக்கச்செய்தல்.<br>• வெளிநாட்டு பொருட்களுக்கான வெட் வரிகளை நீக்க ஊக்கமளிக்காதிருத்தல்.<br>• மதுபானப் போத்தல்களுக்கு ிழழட ிசழழகஸ்டிக்கர் ஒட்டுவதை அறிமுகப்படுத்துதல். |
| 2.2. | சுங்க (கட்டளை) வரி | 113,214,009 | 113,890,332 | 135,000,000 | |
| 2.2.1. | மதுபானம் | 113,214,009 | 113,890,332 | 135,000,000 | |
| 2.3. | சுங்க (சிறப்பு ஏற்பாடுகள்) வரி | 356,239,838 | 370,351,175 | 458,000,000 | |
| 2.3.1. | சிகரெட்டுக்கள் | 85,956,031 | 92,198,106 | 115,000,000 | |
| 2.3.2. | மதுபானம் | 469,564 | 53,275 | - | |
| 2.3.3. | பெற்றோலிய உற்பத்திகள் | 73,983,162 | 66,318,296 | 90,000,000 | |
| 2.3.4. | மோட்டார் வாகனங்கள் (ஆழவழச) | 189,739,774 | 204,080,799 | 240,000,000 | |
| 2.3.5. | ஏனையவை | 6,091,307 | 7,700,699 | 13,000,000 | |

| | | 2017 உண்மையான அளவு | 2018 தற்காலிக | 2019 வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வரிசையாக | வருவாய் மதிப்பிடுவதன் அடிப்படை ஊகங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | • சிகரெட்டுக்கான இறக்குமதி வரியை அதிகரிக்க நடவடிக்கை<br>• மோட்டார் வாகனத்திற்கான கலால் வரியை மறுசீரமைத்தல்<br>• பாம் எண்ணெய் இறக்குமதி மற்றும் மிருக எண்ணெய் கொழுப்பமிலங்களுக்கான சுங்க வரித் தீர்வையை விதித்தல்<br>• உற்பத்தியில் உள் சீனியின் அளவை கருத்தில் கொண்டு பான நிறத்திற்கான கலால் வரியை மறுசீரமைத்தல்.<br>• குளிர்சாதனப் பெட்டிகளுக்கான கலால் வரியை அதிகரிப்பதற்கான மறுசீரமைப்பு<br>• சுற்றுலா பயணிகளின் வருகையை இலக்காகக் கொண்ட, மென் மற்றும் வன் மதுபானங்களுக்கான வரியை அதிகரிப்பது தொடர்பிலான மறுசீரமைப்பு<br>•<br>• பெற்றோல் உற்பத்திக்கான விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தல்.<br>• பயணிகள் போக்குவரத்து திட்டங்கள் மற்றும் வாகன இறக்குமதியினால் பெற்றோல் உற்பத்திக்கான கேள்வி அதிகரிப்பு<br>• தேசிய வருமானவரித் திணைக்களம் சுயுஆஐளுவேலைத்திட்டத்தின் கீழ் வரி பகுப்பாய்வு உள்ளிட்ட வரி நிர்வாகத்தை வலுப்படுத்தல் |
| 2.4. | புகையிலை வரி | 45,750 | 45,367 | 45,000 | • புகையிலைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடடிக்கை மேற்கொண்டுள்ள நிலையில், பீடி இலை இறக்குமதிக்கான செஸ் வரியை அதிகரிப்பதால் புகையிலைப் பொருள் பாவனை குறையும். |
| 2.5. | தொலைத்தொடர்பு வரி | 33,398,732 | 28,326,248 | 25,000,000 | • சர்வதேச மின்சார சீர்திருத்த வரியை நீக்குதல் (ஐவுழுடு)<br>• சர்வதேசத்திற்கான வெளிசெல்லும் மற்றும் உள்வரும் அழைப்புகளுக்கான கட்டணங்களை குறைத்தல். |
| 2.6. | தேசிய கட்டட வரி (டீேவு) | 69,035,199 | 71,357,384 | 91,000,000 | • சிகரெட் உற்பத்திக்கான மற்றும் பொருட்கள், சேவைகளுக்கான பயன்படுத்தப்படும் மின்னனு |

| | | 2017 உண்மையான அளவு | 2018 தற்காலிக | 2019 வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வரிசையாக | வருவாய் மதிப்பிடுவதன் அடிப்படை ஊகங்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | | நிதி பரிமாற்ற அட்டைகள் (நுடநஉவசழளைஉ குரனெ வுசயளெகநச ஊயசனள) பயன்படுத்தி வெளிநாட்டு கொடுப்பனவுக்கான ஃேவுவரியை விதித்தல்.<br>• 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் குறிப்பிட்ட சில மதுபான வகைகளுக்கான வரிச் சலுகை நீக்கி, முழு இலாபத்தைப் பெற்றுக்கொடுத்தல்.<br>• விடேச வேலைத்திட்டத்திற்கான ஃேவு வரியை நீக்க எதிர்பார்க்கப்படுகிறது.<br>• தேசிய வருமான திணைக்களத்தின் சுயுஆஐளுவேலைத்திட்டத்தின் கீழ் வரி நிர்வாகம் மற்றும் வரி கணக்காய்வை வலுப்படுத்தல். |
| 2.7. | தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தகவரிகள் | 584,709 | 1,068,301 | 1,200,000 | • வெளிநாட்டுத் தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் வேறு வர்த்தக விளம்பரங்களுக்கான ஒலிச்சேர்க்கை (னரடிடிைபெ) அதிகரித்துவருகிறது. |
| 2.8. | செல்லுலர் கோபுர வரி | - | - | 1,000,000 | • கோபுரத்திற்கு 20 ஆயிரம் வருடாந்த செல்லுலர் கோபுர வரியை அறிமுகப்படுத்துல் மற்றும் நாடளாவிய ரீதியில் 5 பு சேவையை ஆரம்பிக்க தொலைத்தொடர்பு சேவை வழங்குனர்களை உருவாக்குதல்<br>• குறுந்தகவல் சேவைக்கு வரி விதித்தல் (பிரதான இயக்குனரால் 28 மில்லியன் வரையிலான கையடக்க தொலைபேசிகளின் ஊடாக அனுப்பப்படும் அனைத்து ளுஆளுக்களுக்கும் 25 சதம்) |
| 2.9. | ளுஆளு விளம்பர வரி | - | - | 3,000,000 | |
| 3 | அனுமதிப்பத்திர வரி மற்றும் ஏனையவை | 7,984,101 | 13,338,766 | 48,115,000 | |
| 3.1. | சொகுசு மோட்டார் வாகன வரி | 1,286,942 | 1,036,073 | 8,850,000 | ○ வாகனங்களின் பெறுமதியைக் கருத்தில் கொண்டு அதிசொகுசு வரி அறிவிடல் மற்றும் வாகன இறக்குமதி செய்யும் இடத்திலேயே இலங்கை சுங்க வரியை அறவிடல் |
| 3.2. | பந்தையம் மற்றும் சூதாட்ட வரி | 1,929,035 | 2,46,579 | 3,500,000 | |
| 3.3. | பங்கு பரிவர்த்தனை வரி | 1,333,905 | 1,196,347 | 1,610,000 | |
| 3.4. | ஏனைய உரிமங்கள் | 3,354,571 | 8,574,446 | 34,116,000 | ○ மொத்தச் சேகரிப்பு வரி மற்றும் கெசினோ மற்றும் சரனதழைெ விளையாட்டுகளுக்கான வருடாந்த |
| 3.4.1. | பதிவாளர் நாயகம் திணைக்களம் தொடர்பான பதிவு கட்டணம் | 1,282,402 | 1,401,961 | 1,450,000 | |

| | | 2017 உண்மையான அளவு | 2018 தற்காலிக | 2019 வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வரிசையாக | வருவாய் மதிப்பிடுவதன் அடிப்படை ஊகங்கள் |
|---|---|---|---|---|---|
